விலை: 60.00

பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk

Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 283 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை

16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

UK - 1250/= Australia - 2050/=

France - 1930/= Canada - 2470/=

Germany - 1930/= தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. 0777 554 528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி

(5538)


## தமிழினப் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை கோரி

மூன்றாவது நாளாக உணவு தவிர்ப்பு



22ஆம் பக்கம் பார்க்க

### மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டம்

## அருட்தந்தையர்கள், பெண்கள் மீது பொலிஸார் கொடூரத் தாக்குதல்

(மன்னார்)

மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டம் நடத்திய அருட்தந்தையர்கள், பெண்கள் உட்பட பொதுமக்கள் மீது பொலிஸார் கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பையும் மீறி நூற்றுக்கணக்கான பொலிஸாரின் பாதுகாப்புடன் கலகம் அடக்கும் பொலிஸாரின் துணையுடன் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்கள்

22ஆம் பக்கம் பார்க்க

### மனிதப் புதைகுழி விவகாரம்

# சர்வதேச பங்களிப்புடன் விசாரணைக்கு நடவடிக்கை



### ஐ.நாவில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார

*(ஜெனிவா)*

இலங்கையில் இனங்காணப்படும் மனிதப் புதைகுழிகளை சர்வதேச பங்களிப்புடன் இணைந்து தடயவியல் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். *(22ஆம் பக்கம் பார்க்க)*

## விஜயின் பிரசார கூட்டத்தில் நெரிசல்

### 38 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜயின் பிரசாரக்

22ஆம் பக்கம் பார்க்க

## போதைப்பொருளை ஒழிக்க விசேட திட்டம்

### பாதுகாப்பு அமைச்சர் விஜேபால

(கொழும்பு)

போதைப்பொருள் ஒழிப்புக்கு விசேட திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்

22ஆம் பக்கம் பார்க்க

### பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



23ஆம் பக்கம் பார்க்க

### யாழிலிருந்து பயணித்த

## ரயில் மோதி ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்த புகையிரதம் மோதியதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்

22ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் உணர்வுபூர்வமான போராட்டம் உடைப்பு

### மன்னார் காற்றாலை தொடர்பாக செல்வம் எம்.பி தெரிவிப்பு



(மன்னார்)

காற்றாலைத் திட்டத்தின் ஊடாக நாங்கள் அழிக்கப்படப் போகிறோம் என்ற மக்களின் உணர்வுபூர்வமான போராட்டத்தை ஜனாதிபதி உடைத்துள்ளதாக பாராளு

22ஆம் பக்கம் பார்க்க


தாமதிக்காமல் நிறைவுக்கு முந்தய விலையில் பெற இப்போதே முந்துங்கள்



PAY ONLY 40%

MARINA SQUARE UPTOWN COLOMBO

MARINASQUARE.LK +94 77 2272 727

Access

*T&C apply

(C-296)


நடுவுநிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தீபாவளியினை முன்னிட்டு

MEGA SALE

## ஏசியன் தளபாட நிலையத்தின்

விசேட விலைக்கழிவு 01.10.2025 முதல்...

இடம் : இலங்கை வேந்தன் மண்டபம், யாழ்ப்பாணம்.




CONTACT US

இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(நீராவியடி பிள்ளையார் கோவில் சந்திக்கும் இந்துக் கல்லூரி சந்திக்கும் இடையில்)

076 821 9416, 021 222 7892, 077 358 3879

(5537)

---

## தென்னங்காணி வருட குத்தகைக்கு

சுன்னாகத்தில் நன்றாகக் காய்க்கின்ற இளம் தென்னைகள் உள்ள 5 பரப்புக் காணி வருடக் குத்தகைக்கு உண்டு. தென்னைகளின் ஊடு பயிராக கப்பல், செவ்வாழை,மருத்துவ வாழைகளும் உள்ளன.

தொடர்பு : 077 129 8159

(5538)

---

# வாழ்த்துகின்றோம்

பேராசிரியர்
**சிவநேசன் சபா ஆனந்**
(முதுநிலை விரிவுரையாளர் உடற்கல்வி விஞ்ஞான அலகு)




யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் அவர்கள் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் முதலாவது பேராசிரியராக பதவி உயர்வு பெற்றிருப்பதனையிட்டு பெருமகிழ்ச் சியடைவதுடன் மனம் நிறைவான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல் :- நா.விஜயகுமார் (சுவிஸ்)
(உடற்கல்வி முதலாம் அணி மாணவர்கள் சார்பாக)

ப. தர்மகுமாரன்.
(உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் சார்பாக)

(1599)

---

## வட இந்திய தலயாத்திரை

ஆரம்பம் 10.11.2025 | நாட்கள் 12 | Amount 350,000

காசி/வாரணாசி
- விசாலாட்சி சமேத விஸ்வநாதர்
- அன்னபூரணி
- கால பைரவர்
- சங்கடஹர மோட்ச ஆஞ்சநேயர்
- துர்க்கா மந்திர்
- கங்கை ஆரத்தி
- துளசிதாசர் மந்திர்
- சோழியம்மன்
- பாதாள வராகி அம்மன்
- 64 படித்துறை
- கங்கையில் தர்ப்பணம்

அயோத்தி
- ஸ்ரீ ராம ஜென்மபூமி
- சராயு ஸ்நானம்
- அனுமன் மந்திர்
- சீதை பூமியுள் புதையுண்ட இடம்
- ✓ மதுரா
- ✓ தாஜ்மஹால்
- ✓ ஷீரடி சாய் பாபா
- ✓ சனி சிங்கனாப்பூர்


திருவேணி சங்கமம்
- கங்கை, ஜமுனா, சரஸ்வதி சங்கம ஸ்நானம்
- பாதாள ஆஞ்சநேயர்
- இராமேஸ்வரம்
- உத்திர கோஷ மங்கை
- திருப்புலாணி
- மதுரை மீனாட்சி
- சென்னையில் ஒருநாள் Shopping

- உள்நாட்டு & சர்வதேச விமான பற்றுச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு சமைத்துத் தரப்படும்.
- தண்ணீர்ப் போத்தல் & தேநீர் பழச்சாறு.
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுச்சீட்டுகள்
- இலங்கை சுற்றுலா வழிகாட்டி
- இந்திய சுற்றுலா வழிகாட்டி (தமிழ் & ஹிந்தி தெரிந்தவர்)

## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடான யாத்திரை

ஆரம்பம் 01.11.2025 07.12.2025 16.01.2026 | யாத்திரிகர்:- 10 | நாட்கள் 12 | Amount 250,000



தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத் தணி.திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், கால கஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண் ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனிபகவான், திரு நள்ளாறு, நளன் குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக் கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முரகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெய லலிதா, அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்க லாம்.

**சென்னையின் ஒரு நாள் Shopping**

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel: 077-7680102, 077 7362154

(1586)

---

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது.

(5534)

077 129 8159

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

---

## தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் அல்லது சாவகச்சேரி, கைதடிப் பகுதிகளில் சிறிய அலுவலகம் நடத்துவதற்கான அறை வாடகைக்குத் தேவை.

தொடர்பு : WhatsApp
+1 (647) 643 -2341

(C-3971)

---

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

(C-3970)

---

## வாகனத்துடன் சாரதி தேவை

உங்களிடம் முச்சக்கர வண்டி, Bike, CAR, VAN, LORRY இருந்தால் உங்களை எம்முடன் பதிவு செய்து உங்களுக்கான சவாரிகளை நாம் தருவோம் மாதாந்தம் 100,000/-க்கு மேல் சம்பாதிக்க முடியும்.
(Full Time / Part Time)

PickMe இல.210, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

077 473 7737 | 076 305 4263

(C-3972)

---

## பணியாளர் தேவை

தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் பணியாளர்கள் தேவை.

30 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : WhatsApp
+1 (647) 643 -2341

(C-3971)

---

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாயப் பண்ணை ஒன்றில் தங்கி நின்று வேலை செய்ய கூலி ஆட்கள் தேவை. விவசாயம், தோட்ட வேலைகளில் அனுபவமுள்ள ஆண்/ பெண் கூலியாட்கள் தேவை.

வயது : 25 - 60

076 287 8157

(1594)

---

## வேலைவாய்ப்பு

1. Marketing Executive (Male/Female)
2. Driver (வாகனத்துடன்)

(Full Time / Part Time)

Uber Affiliate இல.197B, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்

070 755 5755 | 070 500 2053

(C-3973)

---

## Win's Repiar

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகிறோம். அத்துடன் வீட்டு வயறிங், பிளமிங், பெயின்ரிங், CCTV கமரா பொருத்துதல், வெல்டிங் வேலைகளும் செய்து தருகிறோம்.

(குறைந்த விலையில் நிறைந்த சேவை)

தொடர்புகளுக்கு : 076 834 6136

(5533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு விசேட கல்விக் கொடுப்பனவு

## அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு

(கொழும்பு)

**கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து விசேட நிதி உதவி வழங்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள், நீண்டகாலமாகப் பல சிரமங்களுக்கும் சமூக ரீதியான ஓரங்கட்டல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

காணாமற்போன, விபத்துக்குள்ளான அல்லது வெளிநாடுகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்க்கைப் பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நிலைமையை மாற்றும் நோக்குடன், ஜனாதிபதி நிதியம் ஊடாக நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, சாதாரண தர மாணவர்களுக்கு மாதம் 3,000 ரூபாயும் உயர்தர மாணவர்களுக்கு மாதம் 5,000 ரூபாயும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதம் 8,000 ரூபாயும் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் மகேந்திரனுக்கு அழைப்பாணை



(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் அர்ஜுன் மகேந்திரனுக்கு கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறிமோசடி தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதவான் அசங்க போதரகம குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பான விசாரணையின் போது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டத்தின் கீழ் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடர முடியும் என்று இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

அதனையடுத்து அர்ஜுன் மகேந்திரனுக்கு குறித்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகுமாறு மீண்டும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர் வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (நி)

# யாத்திரிகர்களுடன் சென்ற வாகனம் மகியங்கனையில் விபத்திற்குள்ளானது!

## 11 பேர் படுகாயம்

(கொழும்பு)

மகியங்கனை, கிரதுரு கோட்டை பகுதியில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

மகியங்கனை, கிரதுரு கோட்டை பிரதான வீதியிலுள்ள சொரபொர 1 கனுவா பகுதியில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வானில் பயணித்த 11 பேர் காயமடைந்த நிலையில் 5 பேர் மகியங்கனை வைத்தியசாலையிலும் 6 பேர் பதுளை வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வான் பதுளையிலிருந்து அநுராதபுரம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக ஒன்பது மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)


KARAVAI CARE

உங்கள் பாசத்துக்குரியவர்களை அன்பாகப் பராமரிப்பதற்கு

கரவை நலவாழ்வு இல்லத்தினை

தெரிவு செய்து மன நிம்மதியுடன் வாழுங்கள்...



எமது சேவைகள்

01. தனிப்பட்ட பராமரிப்பு
02. விசேட தேவையுடையோரிற்கான பராமரிப்பு
03. சிறிதளவு மனநலம் பாதிக்கப்பட்டவருக்கான பராமரிப்பு
04. தொழில்புரிவோருக்காக பகல்நேர பராமரிப்பு
05. மருத்துவ சேவைகள்
06. யோ ா மற்றும் தியானம்

குறுகிய கால தங்குமிட வசதியும் உண்டு

(வெளிநாடுகளிலிருந்து கோவில் திருவிழா, கல்யாணம், விடுமுறைக்கு வருபவர்கள் தங்களது பெற்றோர்களை எமது இல்லத்தில் தங்கவைத்துவிட்டு தங்களது அலுவல்களை மேற்கொள்ளலாம்.)

மனோ/ + 44 773 716 9030 021 226 6144
ஜெகன்/ + 94 777 140 090 075 6988 500

whatsapp மூலமும் தொடர்புகொள்ளலாம்.

கோவிற்கடவை பூந்தோட்டம்,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

Email:karavaicare@gmail.com
mano8@tiscali.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்த அநுரகுமார



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து சுமூகமான உரையாடலில் ஈடு பட்டுள்ளார்.ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்ள நியூயோர்க் நகரத்திற்கு வருகை தந்திருந்த அரச தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்,சிறப்பு இரவு விருந்து வழங்கினார்.

இதில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் கலந்து கொண்டார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமோகமாக வரவேற்றதுடன், சிநேகபூர்வ உரையாடலின் பின்னர் இரு அரச தலைவர்களும் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். (நி)

# டெங்கு பரவும் சூழல்;
## 10 பேருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை பேணிய குற்றச்சாட்டில் காணி உரிமையாளர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை ஆளுகைக்கு உட்பட்ட தொண்டைமானாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயத்தின் போது டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழலை பேணிய 10 காணி உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது மன்றில் முன்னிலையான 10 காணி உரிமையாளர்களும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, தலா 8 ஆயிரம் ரூபாய் வீதம் 10 பேருக்கும் 80 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (8-33)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொடிகாமத்தில் 5 பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு வீட்டுவேலை செய்வதற்கு பெண் வேலையாளர் தேவை. உணவு, தங்குமிடம்இலவசம். சம்பளம் 60,000/=

076 344 3908
076 928 6541 (5501)

## இவ்விடத்தில் இந்த அளவில் விளம்பரம் செய்ய 1875 ரூபா மட்டுமே

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 1/2 பரப்பு, 1 3/4 பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது. (5527)

076 663 3199

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதில் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
077 474 3499 (1592)

## விஜயதசமி நாளில் Keyboard வாசிப்புப் பயிற்சியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

Keyboard ல் அழகான மெல்லிசைகளை வாசிக்க வேண்டும் என்று நீங்கள் கனவு காண்கிறீர்களா?

நீங்கள் ஒரு தொடக்கக்காரராக அல்லது உங்கள் திறமைகளை கூர்மைப்படுத்த விரும்பினாலும் சரி,

எங்கள் திட்டம் உங்களுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது

- தனிநபர் மற்றும் குழு வகுப்புகள் கிடைக்கின்றன,
- அனைத்து வயதினருக்கும் படிப்படியான பயிற்சி,
- காதுகளால் கேட்டு இசையை வாசிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள்,
- சரியான நுட்பங்களையும் விரல் பயிற்சிகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள்,
- கிளாசிக்கல், பாப் மற்றும் நவீன பாடல்களை வாசிக்கவும் அனுபவம் வாய்ந்த பயிற்றுனர்களால் கற்பிக்கப்படுகிறது.

✨ படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் செயல்திறன் திறன்களை அதிகரிக்கவும் இன்றே உங்கள் இசை பயணத்தைத் தொடங்கி, Keyboard வாசிப்பதன் மகிழ்ச்சியைக் கண்டறியவும்!

இன்றே பதிவை மேற்கொள்ளவும் 0777992769



CENTER FOR MUSIC SKILLS DEVELOPMENT
NALLUR CENTRE OR JAFFNA CENTRE (5528)
RHYTHM OF MUSIC

## அபாகஸ் பிராஞ்சைஸி வாய்ப்பு!

(முகவர்கள், பிராந்திய முகவர்கள்)

உலகின் நம்பர் 1 அபாகஸ் நிறுவனத்துடன் இணைந்து கல்வித் தொழில்முனைவோராக வளர அரிய வாய்ப்பு.

- குறைந்த முதலீடு - அதிக வருமானம்
- ஆசிரியர்கள், கல்விநிலையங்கள், சுயதொழில் முனைவோர், பகுதிநேர வேலைவாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த சந்தர்ப்பம்
- முழுமையான பயிற்சி & ஆதரவு

(1582)

GAMA ABACUS
www.gamaabacus.com
+94 77 011 1211
+91 906 111 1211

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
யாழ் கச்சேரிக்கு அருகாமையில், கண்டுக்குளி
(முன்பதிவு செய்து வரவும்) (5508)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு
077 695 4530 (5598)

## கடை வாடகைக்கு

யாழ்.செம்மணி வீதியில் கடைக்கட்டடம் வாடகைக்கு உண்டு.
குளிர்சாதனப்பெட்டி -2
மேசை - 2 விற்பனைக்கு உண்டு

தொடர்பு -070 777 0394 (5526)

## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் லேடன் கம்பனிக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
- யாழ். கே.கே.எஸ். வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
- யாழ்.கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்தி அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்பில் அமைந்த அதி நவீன மாடிக்கட்டடமும்
- யாழ்.பிறவுண் வீதியில் 6 பரப்பில் அமைந்த 6 கடைகளுடன் கூடிய 2 பரப்பு காணியும்
- யாழ்.பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
- யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் DHL ஸ்ரோர்ஸ்க்கு அண்மையில் 2 கடைகளும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக்கு அண்மையில், 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ். மின்சார நிலைய வீதியில் C.T.B பஸ் தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 2 மாடிக் கடைகளும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 723 2535 (C-3969)

## விருந்தினர் விடுதி(Hotel) விற்பனைக்கு

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில், 6 3/4 பரப்பு காணியுடன் (67 Perches) அமைதியான சூழலில், 15 அறைகள், 2 விசாலமான Hall, Solar Power உடன் கூடிய ஆடம்பரமான Hotel (விருந்தினர் விடுதி ) விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள:

Mobile No : 070 160 2608
Whatsapp No : + 61416959213 (5597)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாயவனூர்

# புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்
# மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது

**(கிளிநொச்சி) ..................................**

**கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட திருத்தியமைக்கப்பட்ட மாயவனூர் புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டத்தினை மீளவும் ஆரம்பித்து வைத்தார்.

விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக,மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில், வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தால் 12 மில்லியன் ரூபா செலவில் சூரிய மின்கலம் மூலமும் இயங்கும் வகையில் புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் கால் ஏக்கர் வீதம் 30 விவசாயிகள் பயிர்ச்செய்கை செய்ய முடியும் எனவும் எதிர்காலத்தில் விவசாயிகள் முயற்சிகளைப் பொறுத்து இதனை இன்னமும் விரிவாக்க முடியும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள காணிகளையும் ஆளுநர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், வடக்கு மாகாண நீர்ப்பாசன மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(8-315)





கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை அண்மையில் இடம்பெற்றது. கிளிநொச்சி பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொண்டிருந்தார். (படம்-தேவானந்தன்)

# பருத்தித்துறையில் உணவகத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகத்திற்கு நீதிமன்ற உத்தரவின் கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் போது, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் மூன்று உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மன்றில் முன்னிலையான மூன்று உரிமையாளர்களும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து 37 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்திற்கு சீல் வைக்குமாறும் கட்டளையிட்டது. (8-33-60)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சனசமூக மத்தியஸ்த குழாத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மத்தியஸ்த திறமைகள் உபாய மார்க்கங்கள் பற்றிய பயிற்சி நெறியில் பங்கு பற்றிய பயிற்சியாளர்கள் வளவாளர்கள், உதவி பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் கடந்த 25 ஆம் திகதி களுவாஞ்சிக்குடிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

நீதிபதி தர்மலிங்கம் பிரதீபனின் அர்ப்பணிப்பு சேவைக்கு நன்றியினை தெரிவிக்கும் வகையில், முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தாலும் நீதிமன்ற சமூகத்தாலும் அவர் கௌரவிக்கப்பட்டு வழியனுப்பி வைக்கப்பட்டார். (படம்-சதீஸ்)

# ஞானச்சுடர் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் 332 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வெளியிடப்பட்ட இவ் இதழில் சோதனை மேல் சோதனை, ஆலயங்களில் கொடிமரம் ,பகவத் கீதையின் தத்துவம் போன்ற பல ஆன்மீக தகவல்கள் உள்ளடக்கப்பட்டு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# காற்றாலை திட்டத்திற்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

மன்னார் பகுதியில் நிறுவப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு கண்டனம் வெளியிட்டு வவுனியாவில் நேற்று ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

மக்கள் போராட்ட இயக்கம் மற்றும் வவுனியாமாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியன இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்.

மன்னாரில் கடந்த 56 நாட்களாக போராடி வரும் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் இந்த அரசு மக்களுக்கு விரோதமான முறையில் காட்டுமிராண்டித்தனமான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. எனவே இந்த திட்டத்தை அரசு உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

வவுனியா பழையபேருந்து நிலையப்பகுதியில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு பேரணியாக சென்ற போராட்டக்காரர்கள் பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை வழங்கி வைத்தனர். (8-250)

# உள்ளூராட்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் நடத்தப்படும் உள்ளூராட்சி வாரமும் இறுதி நாள் நிகழ்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நகராட்சி மன்ற பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் திருமதி.த. சுரேந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் உதவி செயலாளர் திருமதி. தர்ஷினி நிதர்ஷன், சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராஜபக்ஷக்களால் தூக்கி எறியப்பட்டவர் அவர்கள் மாளிகைக்குள்ளேயே நுழைந்த கதை



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

**ஷானி** அபேசேகரவைக் கைது செய்தார்கள். சிறையில் அடைத்தார்கள், ஓய்வூதியத்தைப் பறித்தார்கள். பதவி இறக்கினார்கள். இலங்கையின் மிகத் திறமையானப் புலனாய்வு அதிகாரி ஒரு குப்பையைப்போல் தூக்கி எறியப்பட்டார்.

இவ்வாறு கொடுமைகள் புரிந்ததன் மூலம் ராஜபக்ஷக்களின் சாம்ராஜ்ஜியம், ஷானி அபேசேகர (Shani Abeysekara) என்ற அத்தியாயத்தை முற்றிலுமாக அழித்துவிட்டதாக நினைத்தது. ஆனால் எந்த ராஜபக்ஷக்கள் ஷானி அபேசேகர அவர்களைப் பழிவாங்கினார்களோ அதே ராஜபக்ஷக்களின் கதையை முடிக்க அதே ஷானி அபேசேகர திரும்பி வந்திருக்கிறார். திகில் நிறைந்த இந்தக்கதையை ஆரம்பிக்கலாம். மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருக்கக்கூடிய ஷானி அபேசேகரவிற்கு முன்னால் இரண்டு பிரமாண்டமான சவால்கள் காத்திருக்கின்றன.



**முதலாவது**: இந்தோனேசியாவில் கைதாகி இப்போது CID காவலில் இருக்கும் பாதாள உலகக் கும்பல் - அரசியல் வாதிகளினுடைய ஏவல் நாய்களாக இருந்த இவர்கள் - இப்போது தாங்கள் யாருக்காக வேலை செய்தோம் என்ற உண்மைகளைக் கக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களின் வாக்குமூலம் இலங்கையின் பழம்பெரும் தலைகளின் முகத்திரையைக் கிழிக்கப்போகிறது. இவர்களோடு சம்பந்தம் வைத்திருந்த அரசியல் வாதிகளும் ஓடி ஒழிந்துகொண்டு இருப்பதால் இவர்கள் தமக்குள்ளேயே அடித்துச் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். மொத்தமாய் எல்லோரையும் கூண்டோடு அள்ள CID விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

## யார் இந்த மௌலானா?

**இரண்டாவது**: இதைவிட பெரிய சவால்: ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின் முக்கிய சாட்சியான ஹசீர் அசாத் மௌலானாவை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவருவது. 270 அப்பாவிகளின் உயிரைப் பறித்த ஈஸ்ரர்த் தாக்குதல் ஓர் அரசியல் சதி என்கிற மௌலானாவின் வாக்குமூலம் இலங்கையின் சரித்திரத்தையே மாற்றக்கூடியது. அசாத் மௌலானா தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், இப்போது பல்வேறு சட்டச்சாட்டுகளின் நிமித்தம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவருமான பிள்ளையானின் இணைப்புச் செயலாளராயிருந்தவர். மௌலானா இலங்கையில் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக்கூறி சுவிஸ்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறார். அரசியல் தஞ்சம் கோரியிருப்பவரினுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டு வழங்கப்படும் பாஸ்போட்டில் அச்சுறுத்தல் உள்ள நாட்டைத் தவிர மற்ற நாடுகளுக்குச் செல்ல முடியும். ஆகவே சற்றுச் சிக்கலான விவகாரம் இது. மௌலானாவை மீண்டும் எந்த வழியிலேயேனும் நாட்டுக்குள் கொண்டுவரும் ஏற்பாடுகளையும் CID செய்து கொண்டிருக்கிறது. மௌலானா எப்படியும் அழைத்து வரப்படுவார் என்று அமைச்சர் விமல் இரத்நாயக்கவும் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

## ஷானி அபேசேகரவின் வருகை

ஷானி அபேசேகர் திரும்பி வந்திருக்கிறார். ஆனால் அவருடைய முதல் அடி எங்கே விழுந்திருக்கிறது தெரியுமா? ராஜபக்ஷக்களின் கோட்டையிலேயே விழுந்திருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஏக்கர் கணக்கான ஆடம்பர பங்களா இனி இலங்கையின் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் CIDக்கு உடையதாக மாறியிருக்கிறது. இது ஒரு மிகத் தெளிவான செய்தி. இனி உங்களின் கோட்டைக்குள் இருந்தே உங்களை வேட்டையாடுவோம் என்கிற ஒரு ஸ்மார்ட்டான இராஜதந்திரம். ஆனால் ஒரு சாதாரண மனிதரால் இப்படி இவ்வளவு பெரிய சக்திகளை எதிர்க்க முடிகிறது. கையே வைக்க முடியாது என்று இலங்கையில் உள்ள 99% நம்பப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணிலின் மீதும் கை வைத்தார். சிறையிலடைக்கப்பட மூளையானவர் ஷானி அபேசேகர எனலாம். எனவே முதல் பந்திலிருந்தே சனத் ஜெயசூரியாவின் சிக்சர்களை நாம் மிக நீண்ட நாட்களுக்குப் பின்பு கண்டுகளிக்கலாம் போலவும். சனத்தாட்டம் சல்லடைபோடும். போடவேண்டும்.

## யார் இந்த ஷானி அபேசேகர?

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் ஹொலக் ஹோம்ஸ் என்று அழைக்கப்படும் கீர்த்தி மிகு பொலிஸ் அதிகாரியான ஷானி அபேசேகர, அநுரகுமார திஸாநாயக்கா ஜனாதிபதி அவர்களால் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பொலிஸ் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவருக்குக் குற்றப்புலனாய்வு, பகுப்பாய்வு மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. இதில் மிகத் திறன்படத் தன்னுடைய பணியை முடித்த ஷானி அபேசேகர மீண்டும் தனக்குத் தோதான காக்கிச் சட்டையைப் போட்டுக்கொண்டு CID பணிப்பாளராய் அநுரகுமார திஸாநாயக்காவுக்குச் சல்யூட் அடித்து நடந்தபோது ஷானி அபேசேகரவின் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் விசிலடித்து கொண்டாடினார்கள்.

1986ஆம் ஆண்டு சப்இன்ஸ்பெக்டராய் பொலிஸ் திணைக்களத்தில் சேர்ந்த ஷானி அபேசேகர பொலிஸ் விசேட அதிரடிப்படையிலும் ஜனாதிபதி பாதுகாப்புப் படையிலும் பணிபுரிந்தார். அவரின் துணிச்சல்மிகு சேவை அவரை 1999ஆம் ஆண்டு CIDக்கு உள்ளீர்க்க வைத்தது. ஷானி அபேசேகர என்றால் எம் நாட்டு மக்களுக்கு யார் என்று புரியவைக்கும் அளவுக்கு அடுத்துவரும் குற்றங்களும் சம்பவங்களும் விசாரணைகளும் அமைந்தன.

## சட்டண பத்திரிகையின் எழுத்து

ஷானி அபேசேகர 1999ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மெல்ல பிரபல்யமடையத் தொடங்கினர். அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் நடிகர் சனத் குணத்திலக்காவுக்கும் தொடர்பு இருப்பதாக அப்போது சிங்கள வாசகர்கள் மத்தியில் பிரபலமான விடயத்தைச் சட்டண பத்திரிகை எழுதியது. அந்நாளில் சனத் குணத்திலக்காதான் சந்திரிக்காவுக்கு எல்லாமே. மனேஜர், இணைப்புச் செயலாளர், பி.ஏ மாதிரி. சட்டண சந்திரிக்கா அரசினுடைய ஒவ்வொரு ஊழலையும் அச்சமின்றி எழுதித் தள்ளியது. அவுஸ்ரேலியாவில் இருக்கும் குருபரன் என்ற கோடிஸ்வரர் சனல்-9 என்ற தொலைக்காட்சி சேவையை இலங்கையில் தொடங்க சனத் குணத்திலக்காவை அணுகியதாகவும் அனுமதிப்பத்திரம் பெற்றுத்தந்தால் பதிலுக்கு 20 மில்லியன் டொலர் இலஞ்சம் தர குருவரன் ஒப்புக் கொண்டதாகவும் சந்திரிக்காவும் அத்தொலைக்காட்சி சேவையில் காமினி இராஜனாயகம் என்ற பினாமி பெயரில் பங்குதாரராக விரும்பியதாகவும் சட்டண அப்போது எழுதியது. இதன் விளைவுகள் மிகப் பயங்கரமாக அமைந்தன.

பர்த்தகானே சஞ்சிவ என்ற அரச அனுசரணை பெற்ற அந்நாளின் பாதாள உலகத்தாதாவால் சட்டண பத்திரிகை ஆசிரியர் ரோஹன குமார படுகொலை செய்யப்பட்டார். பெரும் அதிர்ச்சி ஏற்படுத்திய அந்த படுகொலையின் சூத்திரதாரி பத்தகானே சஞ்சிவ என்று, இளம் உப பொலிஸ் பரிசோதகரான ஷானி அபேசேகர கண்டுபிடித்தபோது உடனே விசாரணை நிறுத்தப்பட்டது. இதேபோல ஒன்றுதான் 2005ஆம் ஆண்டு இராஜிகிரிய ரோயல் பார்க்கில் நடந்த் சுவீடன் யுவதியான ஈமான் யோன்ஸ் படுகொலை. சாட்சியே இல்லாமல் நடந்தேறிய அந்தப் பயங்கரத்தினுடைய பின்னணியை விசாரித்தவரும் ஷானி அபேசேகர தான். ஆங்காங்கே பதிந்திருந்த கைரேகைகள் மூலம் குற்றவாளி யூட் மஹாவின் கையில் விலங்கைப் பூட்டினார் ஷானி அபேசேகர. பம்பலபிட்டி கோடிஸ்வர வர்த்தகர் சியாம் படுகொலையில் D.I.G.வாஸ் குணவர்த்தனவை உள்ளே தள்ளிய பெருமையும் ஷானி அபேசேகரவுக்கே. சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமத்துங்கவின் கொலை, பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலை, அங்குலானய இரட்டை கொலை, உடத்தலவின முஸ்லீம் இளைஞர்கள் கொலை, பார்த [illegible] கொலை, 11 தமிழ் மாணவர்கள் கொலை 2007-2009 காலத்தில் 11 இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், றக்கி வீரர் வசீன் தாஜுதீன் கொலை, குடிதண்ணீர் கேட்டுப் போராடிய ரத்துப் பஸ்வல மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் பின்னணி, ஊடகவியலாளர்களான போத்தல ஜாயந்த, பிறகீத் எக்னெலிகொடா மற்றும் கேய்த் நோயர் போன்றோரின் மீதான தாக்குதல்கள் என்று இலங்கையினை ஒரு பாதாள தேசமாக்கிய அத்தனை குற்றங்களின் பையில்களையும் ஷானி அபேசேகர திறந்து வைத்தார்.

## வெளியே போ கழுதை; என்ற ரணில்

2015-2019 கால ஆட்சியில் ஷானி அபேசேகர CID பணிப்பாளராய் நியமிக்கப்பட்ட போதிலும் அன்றைய ஆட்சியாளர்கள் கடமையைச் செய்ய ஒத்துழைக்கவில்லை. மத்திய வங்கிக் கொள்ளை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளப் போன போது வெளியே போ கழுதை; என்று பிரதமர் ரணிலினால் விரட்டப்பட்டார் ஷானி அபேசேகர.

## கோட்டாபாய ராஜபக்ஷ ஜனாதபதியும் அவரது செயலும்

ஷானி அபேசேகர 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்ரர் குண்டுவெடிப்பானது அரசியல் அதிகாரத்தை மேற்கொள்வதற்காக நடத்தப்பட்ட ஒரு சதி வலையா? என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். கோட்டாபாய தேர்தலில் வெற்றி கொண்டவுடன் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடாத்திய பொலிஸ் உயர் அதிகாரிகள் தூக்கிப் பந்தாடப்பட்டார்கள். கோட்டாபாய ஜனாதிபதியாகி பதவிப் பிரமாணம் எடுத்ததும் பிரதமரையும் கபினெட்டையும் நியமிப்பதை ஒத்திப்போட்டு விட்டு செய்த முதல் காரியமே ஷானி அபேசேகரவை அப்படியே தூக்கிக் காலிக்கு இடம்மாற்றம் செய்து காலி செய்தார். ஆயினும் ஈஸ்ரர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகளை மிக வேகமாக இனங்கண்டு கைது செய்தமைக்காக சர்வதேச ரீதியில் ஷானி அபேசேகர புகழப்பட்டார். இன்ரப்போலிடமிருந்தும் புகழினைப் பெற்றுக் கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்

கெத்தாய் இருந்த ஷானி அபேசேகர, கடிதம் பிரிக்கும் ஒரு பியோன் தரத்துக்கு மிதித்து எறியப்பட்டார்.

## ஷானி அபேசேகர அவர்களின் அதிரடி முடிவு


யாரோடு சேர்ந்தால் கணக்குத் தீர்க்க முடியுமோ அவர்களோடு சேரத் தீர்மானித்தார் ஷானி அபேசேகர. ஜனாதிபதி தேர்தலின் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகள் என்ற விசேட மாநாட்டைக் கூட்டி அதற்குத் தலைமையும் தாங்கி, அநுரவிற்கு ஆதரவளித்தார் ஷானி அபேசேகர.

அவர் எந்த ஒரு தலைவருடனும் சமரசம் செய்து கொண்டதில்லை. இது ஷானி அபேசேகர அவர்களின் முறை. இனித்தானே பார்க்கப்போகிறாய் காளியின் ஆட்டத்தை என்ற விறுவிறுப்பு இரகம் அந்த முறை எந்த ராஜபக்ஷக்களால் ஷானி அபேசேகர பழிவாங்கப்பட்டாரோ அந்த ராஜபக்ஷக்கள் பாராளுமன்றத் தேர்தல் போட்டியிட முடியாத அளவுக்கு ஓடி ஒழிந்துகொண்டு இருக்கும் நிலையில் ஷானி அபேசேகர வேலையை ஆரம்பித்திருக்கிறார்.

ராஜபக்ஷக்கள் பிறைவேட் லிமிடட். ரணில் உட்பட 90% அரசியல்வாதிகளை ஈரேழு ஜென்மத்திற்கும் பகைத்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஷானி அபேசேகரவுக்கும் அவர் வழியில் செல்லப் போகும் நேர்மையான பொலிஸ் அதிகாரிகளுக்கும் ஏற்படலாம். ஷானி அபேசேகரவின் சேவையில் இதுதெல்லாம் புதிய விடயம் அல்ல. ஷானி அபேசேகர எப்படி அடித்தாடப்போகிறார் என்பதை அவருடைய அடுத்தடுத்த நகர்வுகள் தீர்மானிக்கும். (S.K. Kiruththikan வலையொளிப் பதிவிலிருந்தும் www.lankaenews.com, Daily FT, News 1st பதிவிலிருந்தும் தொகுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



டாக்டர் மகேசன்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார் உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த டாக்டர் மயில்வாகனம் மகேசன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி அறிந்து துயரடைகின்றோம்.

சுன்னாகப் பகுதி மக்களின் நம்பிக்கைக்குரிய மருத்துவராக இருந்து நீண்டகாலம் மருத்துவ சேவையாற்றிய அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.அமைதியை விதானையார் விசுவலிங்கம் ஊடறுத்தார்.

**விதானையார்:-** சிறிது காலமாகக் குறைந்திருந்த வீதி விபத்துச் சம்பவங்கள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

சாவகச்சேரி நுணாவிலில் 20 வயது இளைஞன் மரணம். முல்லைத்தீவு இளைஞர்கள் நான்கு பேர் வாகன விபத்தில் பலி என்ற செய்திகள் மரணத்தை எவ்வளவு தூரம் மலிவாக்கியுள்ளது.


எனினும் இது பற்றி எங்கட அரசியல்வாதிகள் எவரும் வாய்திறக்கமாட்டினம்.

**மூப்பர்:-** இராணுவத்தால உயிரிழப்பு ஏற்பட்டால் மட்டும் தான் எங்கட தமிழ் அரசியல்வாதிகள் கதைப்பினம்.

மற்றும்படி தமிழ் இளைஞர்கள்- தமிழ் மக்கள் உயிரிழக்கிறதில எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

இந்தாப்பாருங்க, ஒரே நாளில ஐந்து இளைஞர்களை விபத்து எண்ட பெயரால தமிழ் மண் இழந்திருக்குது,

ஆனால் அதுபற்றி எங்கட அரசியல் தரப்புகளுக்கு ஏதேனும் கவலை இருக்கோ எண்டால் எதுவும் இல்லை.



## சைவ சமயத்தவர் என்றதும் நடந்ததைப் பார்த்தியளோ

அவர்களைப் பொறுத்தவரை இராணுவம் அடித்ததால-பொலிஸார் சுட்டதால தமிழர் இறந்தால் தான் அது தமிழ் அரசியலுக்கு அடிக்கட்டுப் பசளை.அதுகளுக்குத்தான் நாங்கள் ஆ....கூ.... என்பம்.

மற்றும்படி விபத்தில இறந்தால், தற்கொலை மரணங்கள் அதிகரித்தால் அதைப்பற்றிக் கதைக்க எங்களுக்கு நேரமும் இல்லை. அப்படி இறப்பவர்களை நாங்கள் தமிழர்கள் எண்டு நினைப்பதுமில்லை.

**கங்காணி:-** மூப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

இந்தாப்பாருங்க, எங்கட மண்ணின்ர ஆதிச் சமயமாகிய சைவ சமயம் எப்படியெல்லாம் நிந்திக்கப்படுகுது.

ஆனால் அதுபற்றி எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

அண்மையில சிவ சேனை அமைப்பு அமைதி வழியில ஓர் இடத்தில இருந்து, கவனயீர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அங்க வந்த மூன்று, நான்கு பேர் எந்தளவு தூரம் அட்டகாசம் செய்தினம், அப்ப அமைதி வழியில தங்கட பிரச்சினையை எடுத்துக் கூறுவதற்கும் சைவ சமயத்திற்கு உரிமை இல்லை என்பதைத் தானே அந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுது.

நான் கேட்கிறன். அந்த அமைதிவழி கவனயீர்ப்பை, சைவசமயம் தவிர்ந்த வேறு எந்தச் சமயத்தவர்கள் செய்திருந்தாலும் இப்படி மூன்று நான்கு பேர் வந்து குழப்ப முடியுமோ, கதைக்க முடியுமோ. அப்படிச் செய்திருந்தால், அவர்களின்ர கை, கால் அந்த இடத்தில விழுந்திருக்காதோ.

என்ன செய்யிறது.சைவ சமயம் என்பதால எவரும் வெருட்டலாம்.எப்படியும் கதைக்கலாம். யாரும் கேட்காயினம்.அதை சைவ இளைஞர்கள் பார்க்காயினம்.பொலிஸார் தலையிடாயினம். இது தான் நிலைமை. அதாலதான் அங்கவந்தவர்கள் எவ்வளவு துணிவோட அட்டகாசம் செய்தினம்.

**சாத்திரியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள் எங்க பாப்பம் தமிழ் மன்னன் சங்கிலியன்ர நினைவுதினத்தில எங்கட தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கு பற்றட்டும் பார்ப்பம்.

**சிறாப்பர்:-** ஏன் சாத்திரியார் அப்படிச் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** இஞ்சே சிறாப்பர் சங்கிலிய மன்னன்ர நினைவு தினத்தை எங்கட மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா முன்னெடுக்கிறவர்.

ஒரு தமிழ் மன்னனை அன்னியர்கள் வந்து எங்கட தமிழ் மண்ணில வைச்சு வெட்டிக் கொலை செய்தினம்.

ஆனாலும் அதைப் பற்றி எங்கட தமிழ் அரசியல் தலைவர்கள் ஒருபோதும் கதைக்க மாட்டினம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில மதம் பரப்ப வந்த ஒருவருக்கு மன்னன் சங்கிலியன் மரண தண்டனை கொடுத்துப் போட்டான் என்பதால, இங்க இருக்கிற சில மதவாதிகளுக்கு சங்கிலிய மன்னன் தமிழனாகவோ, தமிழ் மன்னனாகவோ தெரிவதில்லை.

அதால அவையளின்ர வாக்குகள் தங்களுக்குக் கிடைக்கா தெண்ட நினைப்பில சங்கிலிய மன்னனின்ர நினைவு தின நிகழ்வுகளில தமிழ் அரசியல் தரப்புகள் பங்கு பற்றுவதில்லை.

**சிறாப்பர்:-** அட! நாசமறுப்பு. அதால தானோ சங்கிலிய மன்னனை உந்த சுயநல தமிழ் அரசியல்வாதிகள் இருட்டடிப்புச் செய்யினம்.

**பண்டிதர்:-** பார்த்தியளோ இப்ப எங்கவிட்ட தமிழ் உணர்வு இல்லை. மத உணர்வு தானே மேலோங்கி இருக்குது.

தமிழ் உணர்வு இருந்தால், நாங்கள் எல்லாரும் எங்கட நல்லூர் இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனைப் போற்றித்துதி செய்ய வேணுமல்லோ.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா! இது தான் எங்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உள்ள வித்தியாசம்.

சிங்கள மக்கள் தங்கட சிங்கள மன்னர்களைப் போற்றித் துதிக்கினம். அவர்களின் வரலாறுகளை சிங்கள மாணவர்களுக்குத் தெரியப்படுத்துகினம்.

அன்று மதமாற்றம் செய்யவந்தவர்களை வெட்டிச் சரித்த சிங்கள மன்னர்களை சிங்கள மக்கள் கடவுளாகப் போற்றுகினம்.

ஆனால் இஞ்ச மதம் மாற்ற வந்த அன்னியர்களைத் தண்டித்ததற்காக சங்கிலிய மன்னனை ஒரு தரப்புத் தமிழர்கள் ஒதுக்குகினம்.

ஆக, எங்கட தமிழ்ப் பகுதிகளில மதவாதம் தான் கோலோச்சுது.

நாங்கள் கூறுகிற இந்த உண்மையை இன்னும் சில வருடங்களில எங்கட ஆட்கள் மன்னாரில அனுபவ ரீதியாகக் கண்டு கொள்ளுவினம்

இவ்வாறு வாத்தியார் கூற , அதனைத் தானும் ஆமோதிப்பதுபோல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த காங்கிரஸோடு கூட்டணி சேரத் துடிக்கிறார் விஜய்!



விஜய் எதிர்ப்பையே முழுநேர அரசியலாக முன்னெடுக்கிறது. முன்பைப்போல தி.மு.கவை விமர்சிப்பதில்லை என நா.த.க மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்திருக்கும் இந்தச் சூழலில், அந்தக் கட்சியின் இளைஞர் பாசறை மாநிலச் செயலாளர் இடும்பாவனம் கார்த்திக்கிடம் அது தொடர்பான சில கேள்விகளை முன்வைத்த போது

**ஈழம் குறித்து விஜய் பேச ஆரம்பித்திருப்பதற்கு, நீங்கள் ஏன் பதற்றப் படுகிறீர்கள்?**

தடைசெய்யப்பட்ட இயக்கம் என மற்ற அரசியல் கட்சிகள் பேசத் தயங்கிய காலகட்டத்தில், எங்கள் அண்ணன் பிரபாகரன் என நாடெங்கிலும் பேசி, தமிழ் நாட்டு இளைஞர்களிடம் விடுதலைப் புலிகளின் தியாகத்தைக் கொண்டு சேர்த்தது அண்ணன் சீமான். இன்றைக்கு ஈழத்தை வைத்து அடையாள அரசியல் செய்ய முயலும் விஜய், 2009இல் ஈழப்படுகொலை முடிந்த மூன்றாவது மாதம், ராகுல் காந்தியைச் சந்தித்து மாற்றத்திற்காக உழைப்பவர் எனப் புகழாரம் சூட்டினார். இன்றளவும் தலைவர் பிரபாகரன் பெயரை உச்சரிக்கவே பயப்படுகிறார். ஆக, விஜய் கையிலெடுக்கும் அனைத்தும் வாக்கு அரசியலுக்கான வேடம்தானே தவிர வேறொன்றுமில்லை.

**தி.மு.கவை மிகக் கடுமையாக விஜய் விமர்சிக்கும்போதெல்லாம், விஜயை நீங்கள் கடுமையாக விமர்சிப்பது பல்வேறு சந்தேகங்களைக் கிளப்புகிறதே?**

முதலில், தி.மு.கவை விஜய் எதிர்க்கிறார் என்பதே பொய். கட்சி தொடங்கி ஒன்றரை ஆண்டில், தி.மு.கவைக் கண்டித்து த.வெ.க நடத்திய ஆர்ப்பாட்டங்கள் எத்தனை? மக்கள் தன்னெழுச்சியாக மேற்கொண்ட போராட்டங்கள் எதிலாவது பங்கேற்றிருக்கிறாரா? சாதிய வன்கொடுமைகள், ஆணவக்கொலைகள் குறித்து வாய் திறந்தாரா? அவருக்கு எதிலாவது உறுதியான நிலைப்பாடு இருக்கிறதா? நாகையில், "ஈழச் சொந்தங்களுக்குத் துணை நிற்போம்" என்று சொல்லிவிட்டு, ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த காங்கிரஸோடு கூட்டணி சேரத் துடியாய்த் துடிக்கிறார். தேர்தல் இலாபக் கணக்குகளுக்காக, காங்கிரஸோடும் உறவாடுவார் என்றால் அது பச்சைத் துரோகமில்லையா?

**பா.ஜ.கவை, நா.த.க சீண்டுவதே இல்லை என்கிற விமர்சனமும் இருக்கிறதே?**

பா.ஜ.க எதிர்ப்பைத் தொடர்ச்சியாகப் பேசுவதோடு, அவர்களது கொடுங்கோன்மையையும் எதிர்க்கிறோம். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பா.ஜ.கவுக்கு அச்சுறுத்தும் அளவுக்கான பேராற்றலோ, காலூன்றும் அளவுக்கான சக்தியோ கிடையாது. கடைசிவரைக்கும் திராவிடக் கட்சிகளின் தொங்கு சதையாகவே இருந்து அவர்கள் கட்சி நடத்த வேண்டியதுதான்.

# ஆச்சி அறிவுரை



# பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்சி முக்கியம்

## பேராண்டி...

தற்காப்புக்கலை தொடர்பிலை எங்கட ஆக்களுக்கு சரியான புரிதல் இல்லை எண்டுறதுதான் உண்மை.

தற்காப்புக்கலை எண்டுறது எவ்வளவு முக்கியமானது. அதிலும் நீச்சல் பயிற்சி வலு முக்கியமானது.

எங்கட ஆக்கள் பிள்ளைகளுக்கு நீச்சல் பழக்கிறதுக்கு அனுமதிக்கிறதேயில்லை.

நீச்சலைத் தீண்டத்தகாத ஒண்டாப் பாக்கினம். பெற்றாரின் இந்த மனநிலையாலை எத்தினை உயிர்கள் அநியாயமாப் போச்சுது எண்டு தெரியுமோ பேராண்டி.

எங்கட ஐயா எங்களை கிழமையில ஒருநாள் கீரிமலைக் கடலுக்கு குளிக்கக் கூட்டிக் கொண்டு போவார். பொம்பளைப் பிள்ளையை கடலுக்குக் குளிக்கக் கூட்டிக்கொண்டு போறது சரியோ எண்டு ஊரிலை கனக்கப் பேர் கதைக்கிறவை.

ஒருநாள் நாங்கள் போகேக்க ஒராள் ஐயாட்டைக் கேட்டிட்டார். அதுக்கு ஐயா நல்ல பதில் குடுத்தார்.

ஆள் மூச்சுப் பேச்சில்லாமல் போய்ட்டார்.

பேராண்டி, கிட்டடியிலை கிளிநொச்சிப் பகுதியிலை 11ஆம் ஆண்டு படிக்கிற பிள்ளைகள் இரண்டு பேர் கோவில் குளத்துக்குள்ள போட்டோ எடுக்கிறதுக்காக இறங்கி தண்ணிக்குள்ள மூழ்கி இறந்த விசயம் கேள்விப்பட்டனியெல்லோ.

அந்தப் பிள்ளைகளுக்கு நீச்சல் தெரிஞ்சிருந்தால், அநியாயமா அந்த இரண்டு உயிரும் போயிருக்காதே. வெளிநாட்டில பிள்ளைகளுக்கு இரண்டு மூன்று வயது வந்ததுமே முதுகில பலூன் கட்டி நீச்சல் குளத்துக்குள்ள தூக்கிப் போட்டுடுவினம். அதுகளும் அந்த வயசிலையே நீந்தப் பழகிடுங்கள். அதால அங்க அந்தப் பிரச்சினையேதும் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின்ர அறிக்கையின்படி வருடமொன்றுக்கு உலகளாவிய ரீதியில் இரண்டு இலச்சத்து இருபதாயிரம் பேர் நீரில் மூழ்கி இறக்கினமாம். இதில முக்கால்வாசிப் பேர் தெற்காசியாவில இருக்கிற ஆக்கள்தான் இறக்கினமாம்.

இலங்கையில வருடத்தில 800 முதல் 1000 பேர் வரை நீரில் மூழ்கி இறக்கினம் எண்டால் இதைவிட்ட கொடுமை ஏதும் உண்டோ பேராண்டி.

எங்கட பெற்றார் பிள்ளைகளை ரியூசனில விட்டுட்டு றோட்டிலை விண்ணாந்து கொண்டு நிக்கிறதை நிப்பாட்டிட்டு, பிள்ளைகளுக்கு தற்காப்பு, உயிர்காப்பு கலையான நீச்சல் பயிற்சியைக் கொடுக்க முன்வரவேணும்.


**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கடி நெட்டி முறித்தால் கை விரல்கள் பலவீனமாகுமா?



நெட்டி முறிக்கும் போது, எழும் சத்தம் தான் சோர்வை நீக்கி, புத்துணர்ச்சி கிடைத்த உணர்வை ஏற்படுத்துகிறது.

அடிக்கடி நெட்டி முறிப்பது ஆரோக்கியமான பழக்கமல்ல.

விரல் எலும்புகளின் இணைப்புகளுக்கு இடையே சைனோவியல் ***(Synovial Fluid)*** என்கிற திரவம் சுரக்கும். இதுதான் மூட்டு எலும்புகள் உரசாமலிருக்க எண்ணெய் போலச் செயற்படுகிறது.

நீண்டநேரம் அசையாமலிருந்தால், குறிப்பிட்ட பகுதியின் எலும்புகளுக்கிடையே இந்தத் திரவம் மொத்தமாகச் சேர்ந்துவிடும்.

நெட்டி முறிக்கும்போது, எலும்பு இணைப்புகள் விரிவடைவதால், அதனுள் சேர்ந்திருக்கும் திரவம் வேகமாக நகரும் போது சொடக்குச் சத்தம் வெளிப்படுகிறது.

தூக்கத்தின் போது உடல் அசைவு மிகக் குறைவாக இருப்பதால், தூங்கி எழுந்ததும் நெட்டி முறித்தால் சொடக்குச் சத்தம் அதிகமாக இருக்கும்.

நெட்டி முறிக்கும் போது ஏற்படும் இந்தச் சத்தம்தான், பலரை மீண்டும் மீண்டும் அதைச் செய்யத் தூண்டுகிறது.

சைனோவியல்தான் நம் கை மற்றும் கால் விரல் இணைப்புகளில் உள்ள எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசாமல் ஒத்திசைவாகச் செயற்பட உதவும் திரவமாகச் செயற்படுகிறது. அடிக்கடி நெட்டி முறிக்கும் போது இந்தத் திரவம் குறைகிறது.

மேலும், கை விரல்களில் டென்டன், லிகமென்ட், கேப்ஸ்யூல் என மூன்று அமைப்புகள் உள்ளன. அடிக்கடி ஒருவர் நெட்டி முறிக்கும் போது இவை மூன்றும் வலுவிழந்து விரல்கள் பலவீனமடையக் கூடும்.

45 வயதுக்கு மேற்பட்டவர்கள் அடிக்கடி கை விரல்களில் சொடக்கு எடுத்துக்கொண்டே இருந்தால், கைகளில் பிடி வலிமை யின்றிப் போவது, முழங்கை வீக்கம், தசைநார் பாதிப்பு போன்றவை ஏற்படலாம்.

# அடுக்களைப் பக்கம்



- கேக் செய்யும்போது முந்திரி, பாதாம், பிஸ்தாவை பாலில் ஊற வைத்துவிட்டு, பிறகு மாவில் சேர்த்து கேக் தயாரித்தால், கேக்கில் இருந்து நட்ஸ் வகைகள் உதிராது.
- தக்காளியை உப்புக் கலந்த நீரில் போட்டு எடுத்தால், 10 நாட்கள் வரை கெடாது.
- அப்பிள் துருவல், உலர் திராட்சை (கிஸ்மிஸ்), சீவிய முந்திரியை இட்லி மாவில் கலந்து இட்லி சுட்டெடுத்துக் கொடுத்தால், குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.
- சப்பாத்தி மாவை தண்ணீர் கலந்து பிசைவதற்கு பதில் கீரைச்சாறு, பீட்ரூட் சாறு போன்று நீங்கள் விரும்பும் காய்கறிகளின் சாறுகளைக் கலந்து பிசைந்து உருட்டி சப்பாத்தி சுட்டெடுத்தால், வித்தியாசமாக இருப்பதுடன் புதுவிதமான சுவையும் கிடைக்கும்.
- சுக்குமல்லி காபி தயாரிக்கும் போது அத்துடன் சோம்பு, காய்ந்த ஆவாரம் பூ, நன்னாரி வேர் போன்றவற்றை இடித்துச் சேர்த்து கொதிக்க வைக்கவும். பிறகு வடிகட்டி காபி தயாரித்தால் சுவையாகவும், மணமாகவும் இருக்கும்.
- வெண்டைக்காயை நறுக்கி வெயிலில் அரை மணி நேரம் வைத்து பிறகு வதக்கினால், அதனுடைய வழவழப்புத் தன்மை நீங்கிவிடும்.
- செக்கில் தேங்காய் எண்ணெய் ஆட்ட கொடுக்கிறீர்களா?, சிறிதளவு பன்னீர் ரோஜா இதழ்களையும் சேர்த்து ஆட்டக் கொடுத்து அரைத்து எடுக்கிற தேங்காய் எண்ணெய் நறுமணமாக இருக்கும்.
- வறுத்த கொள்ளுப் பொடியை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர, உடல் பருமன் குறையும்.
- ரவையை தூள் செய்து ஊறவைத்து இரண்டு மணி நேரம் கழித்து தோசை மாவில் சேர்த்து வார்த்தால் தோசை அருமையாக இருக்கும்.



# மரவள்ளிக்கிழங்கு பட்டாணி தேங்காய்ப்பால் கிரேவி



## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:



நறுக்கிய மரவள்ளிக்கிழங்கு கால் கிலோ
எண்ணெய் – 4 கரண்டி
பட்டை, கிராம்பு, ஏலக்காய் – 2
உப்பு – தேவைக்கேற்ப
தேங்காய்ப்பால் – ஒரு டம்ளர் (அரை மூடியில் எடுத்தது)
ஊறவைத்த பச்சைப் பட்டாணி – 200 கிராம்
வெங்காயம் – 50 கிராம், பச்சை மிளகாய் – 4
முந்திரி – 6, கொத்தமல்லித்தழை – சிறிதளவு

### செய்முறை

வாணலியில் நறுக்கிய மரவள்ளிக் கிழங்கு, ஊற வைத்த பச்சைப் பட்டாணி, உப்பு சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு வேக விடவும். மிக்ஸியில் பச்சை மிளகாய், முந்திரியை விழுதாக அரைத்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு பட்டை, கிராம்பு, ஏலக்காய் போட்டு தாளித்து, நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். பின்பு வேக வைத்த மரவள்ளிக்கிழங்கு, பட்டாணி சேர்க்கவும். அதில் அரைத்த பச்சை மிளகாய், முந்திரி விழுதை சேர்த்து ஒரு கொதிவிடவும். பின்பு தேங்காய்ப்பால், உப்பு சேர்த்து நன்கு கலந்து இறக்கி, நறுக்கிய கொத்தமல்லித்தழை சேர்த்தால் மரவள்ளிக்கிழங்கு பட்டாணி தேங்காய்ப்பால் கிரேவி தயார்.

**மரவள்ளிக்கிழங்கு வெப்ப மண்டல, துணை வெப்ப மண்டலப் பகுதிகளில் ஆண்டுப் பயிராகப் பயிரிடப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

### ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழருக்கு நீதியைப் பெற்றுத்தருமா?

*சிவம் - வதிரி*

நீதியைப் பெற்றுத்தரும் அதற்காக போர் குற்றம் புரிந்தவர்களை சிறையில் அடைத்தோ, மரண தண்டனை விதித்தோ தீர்ப்பளிக்கும் என்று கனவு கண்டு விடாதீர்கள்.

சிறுபிள்ளை ஒன்று தவறு செய்தால் கண்டிப்பது போல இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது என்று கண்டித்து விடுவதுடன் சர்வதேசத்தின் வேலை முடிந்துவிடும்.

ஆதலால் இது தொடர்பில் அதிக எதிர்ப்பார்ப்பை எதிர்பாராதீர்கள். பிளீஸ்.



ஈழத்தமிழர் தலைவனை இழந்து தவிக்கின்றனர். அவர்களுக்கு உறுதுணையாய் இருப்பேன் என்கிறாரே நடிகர் விஜய்?

### நாம் மிகக் கெட்டவர்கள் என நினைப்பவர்கள் எமக்கு நல்லது செய்யும் போது...??

*டிலக்ஷ் - யாழ்.நகர்*

வேப்பம் குழையை ஒரு ஆடு தொடர்ந்து சாப்பிடுமாக இருந்தால் வேம்பின் கயர்ப்புத் தன்மை அந்த ஆட்டின் இறைச்சியிலேயே கலந்திருக்கும்.

அதை உண்ணும் போது இறைச்சி கயர்ப்புச் சுவையுடன் இருக்கும் என்பதை பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட கயர்ப்புச்சுவை கொண்ட வேப்ப மரத்தின் பூவில் சிறுதுளி தேன் இருப்பதும் அத்தேன் இனிப்பதும் உங்களுக்குத் தெரியுமா?

ஆம், நாம் யாரை முரடன் என நினைக்கிறோமோ அவன் மனது இளகும் தன்மையுடையதும் நாம் யாரை நல்லவர் என நினைக்கின்றோமோ அவர் மனது கல்லாயும் இருப்பதுதான் பலர் கடவுளை வெறுப்பதற்கான முதற் காரணமாகும்.

### நல்லதுக்குக் காலம் இல்லை என்று எதைச் சொல்வார்கள் வியாசரே?

*பண்டிதர் - மாதகல்*

வெயிலின் கொடுமை. தார்வீதி அனலாய்ச் சுடுகின்றது. ஒருவர் செருப்பில்லாமல் அந்த வீதியில் நடந்து விடுகிறார்.

அடுத்தவர்களின் கஷ்டம் தீர்க்கும் எண்ணம் கொண்ட ஒருவர் அதைக் கண்டுவிட்டு தனது செருப்பைக் கழற்றி அவரிடம் கொடுக்கிறார்.

கொடுமை, அவர் கொடுத்த செருப்பை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு மீண்டும் சுடும் வீதியில் சிரமத்துடன் நடக்கிறார் அவர்.

இப்போது இவரும் சுடும் வீதியில் சிரமத்துடன் நடந்து செல்கிறார்.

### தீமை செய்பவர்கள் நன்மை தொடர்பில் சிந்திக்காமல் இருப்பார்களா?

*இந்து - வதிரி*

இஸ்ரேல், காசா நகரை 95 விகிதம் அழித்துவிட்டது. எத்தனை இலட்சம் மக்கள் இறந்துவிட்டார்கள். எத்தனையாயிரம் பேர் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் இஸ்ரேலின் இரத்த தாகம் தீரவில்லை. தன்னிடம் பலம் இருக்கிறது என்பதற்காக பலவீனமானவரிடம் தன் பலத்தைக் காட்டக் கூடாது.

இலங்கையிலும் ஈழத்தமிழருக்கு நடந்த கொடூரமும் இதன் வெளிப்பாடே. பல மிழந்த தமிழினத்தை கொத்துக் கொத்தாய்த் துடிக்கத் துடிக்க கொன்று ரசித்தார்கள் ராஜபக்ஷர்கள்.

### எதிர்ப்பு அரசியல் தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?

*நரேந்திரன் - சங்கத்தானை*

எதிர்ப்பு அரசியல் செய்வதில் தவறு இல்லை. ஆனால் நாம் எதிர்ப்பு அரசியல் செய்வதால் எமது மக்களுக்கு ஏதும் நன்மை உண்டா என்று தெரிந்துவிட்டு எதிர்ப்பரசியலைச் செய்யலாமல்லவா?

தமிழினத்துக்கு சல்லி பிரயோசனமில்லாத எதிர்ப்பு அரசியலை ஏன் சிலர் செய்கிறார்கள் என்று அறிய முற்படும் போது, அவர்களின் சுயநல அரசியல் இலாபத்துக்காக மேற்கொள்வது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

இப்படி மக்கள் நலன் தவிர்த்து தமது அரசியல் இருப்புக்காக எதிர்ப்பரசியல் செய்பவர்களை மக்கள் இனம் கண்டு எடுத்து எறிய வேண்டும்.

அப்போதே மீண்டும் இவ்வாறானவர்கள் எழமாட்டார்கள்.

### திலீபனை அஞ்சலிக்க வந்தவரை தடுத்து நிறுத்தியது தொடர்பில் வியாசரின் கருத்து?

*குமார் - முகமாலை*

வந்தவர் எதிரியாயினும் வரவேற்று உபசரித்து வழி அனுப்பும் வழி வந்த தமிழினத்திடம் வீடு தேடி வந்தவரை அவமதிக்கும் குணம் எப்படி வந்தது என்றே புரியவில்லை.

சிலவேளைகளில் எம்மிடம் உள்ள குறுகிய குணம் வெளிவந்துவிடும். அதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

வந்தவர் யார் ஆள் என்பது எமக்குத் தேவையில்லாததே. வந்தவர் ஏதும் குதர்க்கம் செய்தால் அவரைக் கவனிப்பதில் தவறில்லை.

அஞ்சலிக்க வருகிறாரா? சண்டையிட வருகிறாரா? என்பது தெரியாமல் எதிர்ப்புத் தெரிவிப்பது அவ்வளவு நல்லதல்ல.

### ஈழத் தமிழர் தலைவனை இழந்து தவிக்கின்றனர். அவர்களுக்கு உறுதுணையாய் இருப்பேன் என்கிறாரே நடிகர் விஜய்?

*சேகர் - கொய்யாத்தோட்டம்*

நடிகர் விஜய் அரசியலுக்காகக் கூறினாரா? இலங்கை அரசை வெறுப்பேற்றக் கூறினாரா? என்பது எமக்குப் புரியவில்லை. ஆனால் அதுதான் உண்மையானது.

தமிழினத்திற்கு நல்ல தலைவன் இல்லை. அவ்வாறு ஒரு தலைவன் இனிப் பிறந்து வரப் போவதுமில்லை.

எமக்கு வாய்த்த தலைவர்கள் தம்மைத் தாமே தலைவன் என்று கூறிக்கொண்டு திரிகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களைத் தலைவனாக ஏற்றால் தமிழினம் இருப்பதை விட இன்னும் கந்தறுந்து போகும் என்பதே மெய்.

### ஒருவருக்கு எம்மைப் பிடிக்கவில்லை என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம் வியாசரே?

*தேவராஜன் - கொற்றாவத்தை*

எம்மைத் சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்வார்கள். மீறித் சந்தித்தால் எம்மிடம் பேசும் நேரத்தைக் குறைத்துக் கொள்வார்கள். அத்துடன் எம்மை விட்டு விலகிச் செல்ல முற்படுவார்கள்.

நம் கண்முன்னேயே வேறொருவருடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். எம்மில் உள்ள குறைகளை அடுத்தவர்களிடம் சுட்டிக்காட்டி குத்திப்பேசுவார்கள்.

எம்மிடமிருந்து சாதாரணமாக வரும் வார்த்தைகளுக்கே கோபப்பட்டு கொந்தளிப்பார்கள். இவற்றை அறிந்து கொண்டு இன்னும் இவர்களின் நட்பு தேவை என்று நினைத்தால் எம்மைப்போன்ற முட்டாள் வேறுயாருமில்லை.



ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழருக்கு நீதியைப் பெற்றுத்தருமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## ஸ்டீவ் ஜாப்ஸ்

அமெரிக்காவின் செல்வாக்கு மிக்க தொழிலதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ். அப்பிள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி.

கணைய புற்று நோயால் 56ஆவது வயதிலேயே இறந்தார். அப்போது அவர் விட்டுச் சென்ற சொத்து ஏழு பில்லியன் டொலர். இந்திய மதிப்பில் சுமார் 61,130 கோடி ரூபாய். இதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால் மரண தருவாயில் அவர் கூறிய வார்த்தைகள்தான் ஆச்சரியம் மிக்கவை. ஆம், அவர் கூறினார்.

"வாழ்க்கை என்றால் பணம் சம்பாதிப்பது என்றுதான் நான் நினைத்திருந்தேன்". ஆனால் இப்போதோ என்னிடம் இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. செல்வம் வெறும் எண்ணிக்கையாக மாறிவிட்டது.

இதோ இப்போது நோயால் அவதியுற்று படுக்கையில் இருந்தவாறு என் வாழ்க்கை குறித்து சிந்திக்கின்றேன். உடனடியாக மரணத்தை எதிர்கொள்ளும்போது எனது நற்பெயரும் செல்வமும் அர்த்தமற்றதாக மாறிவிட்டன.

உங்கள் வாகனத்தை செலுத்தவும், அன்றாடப் பணிகளை செய்யவும், தொழிலை நிர்வகிக்கவும் பணியாளர்களை நீங்கள் நியமிக்கலாம். ஆனால் உங்கள் வலியையோ உங்கள் நோயையோ சுமக்க எந்த விலை கொடுத்தும் யாரையும் உங்களால் நியமிக்க இயலாது.

எதை இழந்தாலும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்க்கையை இழந்தால் பெற்றுக்கொள்ள முடியாது.

30 டொலர் கடிகாரம். 3000 டொலர் கடிகாரம். இரண்டும் ஒரே நேரத்தையும் ஒரே நிமிடத்தையுமே காட்டுகின்றன என்பதை இப்போது உணர்கிறேன்.


வசிக்கும் வீடு 300 சதுர அடியாகவோ 3000 சதுர அடியாகவோ இருந்தாலும், ஒருசில மீற்றருக்கு மேல் காலை விரித்து உங்களால் தூங்க முடியாது.

விமானத்தில் முதல் வகுப்பிலோ பொருளாதார வகுப்பிலோ எப்படிப் பயணித்தாலும், விமானம் விபத்துக்கு உள்ளானால் உங்களுடன் சேர்ந்து எல்லாம் ஒரு நொடியில் சாம்பல்தான்.

எனவே வாழ்க்கையில் ஓர் உயரிய இலக்கை நீங்கள் வைத்திருந்து, அதை அடைந்திருந்தால் மற்றவர்களை உங்களால் மகிழ்ச்சியடையச் செய்ய முடிந்தால் அதுதான் உண்மையான நிம்மதி என்பதை புரிந்துகொள்வீர்கள்".

மரணப்படுக்கையில் இருந்தபோது ஸ்டீவ் ஜாப்ஸ் கூறிய அந்தக் கடைசி வார்த்தையே பல நூறு வருடங்களாக ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் சரியான கருத்து. ஆனால் ஏனோ பலர் சிந்திக்க மறுக்கின்றனர்.

# கிருமிகள்...



1. கழிவறையும், குளியலறையும் வீட்டிற்குள் வைக்காமல் கொல்லைப்புறத்தில் வைத்தார்கள். ஏன்? கண்ணுக்கு தெரியாத **கிருமிகள்.**
2. சலூனுக்கும், சாவுக்கும் சென்று வந்தால் எதையும் தொடாமல் குளித்த பின் வீட்டிற்குள் வந்தார்கள். ஏன்? **கிருமிகள்.**
3. செருப்பை வீட்டின் வெளியே விட்டார்கள். ஏன்? **கிருமிகள்.**
4. வெளியே சென்று வந்தால் கைகால் கழுவி வீட்டிற்குள் வரச் சொன்னார்கள். ஏன்? **கிருமிகள்.**
5. பிறந்தாலோ, இறந்தாலோ தீட்டு என்று 10, 16 நாட்கள் தனிமைப்படுத்தினர். ஏன்? **கிருமிகள்.**
6. சாவு வீட்டில் சமைக்கக் கூடாது என்றார்கள். ஏன்? **கிருமிகள்.**
7. குடும்பத்திற்கு சமைக்கும் பெண்கள் குளித்துவிட்டு சமைத்தார்கள். ஏன்? **கிருமிகள்.**
8. வாசல் பெருக்கி சாணம், மஞ்சள் தெளித்து கோலமிட்டார்கள். ஏன்? **கிருமிகள்.**
9. மண், செம்பு, வெண்கலப் பாத்திரங்களை உபயோகித்தார்கள். ஏன்? **கிருமிகள்.**
10. வீட்டில் சமைத்த உணவையே பெரும்பாலும் உண்டார்கள். ஏன்? **கிருமிகள்.**

தனி மனித ஆரோக்கியம், சமூகத்தில் சுத்தம், அண்டை அயலாரோடு அகலாது அணுகாது உறவாடுதல் போன்ற நம் மூதாதையர் வாழ்வியல் நெறியை கிண்டலடித்து, திட்டமிட்டு சிதைத்து நாகரீகம் எனும் பெயரில் அதற்கான விலையை இன்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

# ஒன்றில் ஒன்று தொடர்ந்து வரும்

ஒன்றில் ஒன்று தொடர்ந்து வரும்
ஒன்றுடன் ஒன்று மாறி வரும்
ஒவ்வாமை ஒற்றுமை கலந்து வரும்
ஒவ்வொன்றும் புரிந்துகொண்டால்
நெஞ்சினில் அமைதி வரும்

இரவு முடிந்தால் பகல் வரும்
உறவு முறிந்தால் பகை வரும்
அறிவு வளர்ந்தால் தெளிவு வரும்
பண்பு வளர்ந்தால் பணிவு வரும்


தொடக்கம் இருந்தால் முடிவு வரும்
அடக்கம் இருந்தால் அகிம்சை வரும்
பேராசை இருந்தால் அழிவு வரும்
பேராண்மை இருந்தால் அமைதி வரும்
முயற்சி இருந்தால் உயர்ச்சி வரும்

பயிற்சி இருந்தால் வெற்றி வரும்
துணிவு இருந்தால் திடம் வரும்
கனிவு இருந்தால் வளம் வரும்
சுறுசுறுப்பு இருந்தால் உற்சாகம் வரும்
சோம்பல் இருந்தால் உறக்கம் வரும்

பொறாமை இருந்தால் வீழ்ச்சி வரும்
கொடாமை இருந்தால் சூழ்ச்சி வரும்
சுயநலம் இருந்தால் இகழ்ச்சி வரும்
பொதுநலம் இருந்தால் மகிழ்ச்சி வரும்

இன்பம் தொடர்ந்தால் துன்பம் வரும்
துன்பம் தொடர்ந்தால் இன்பம் வரும்

அ. எட்வின்பீரிஸ்
(பண்டைநகர்நாயகன்) பண்டத்தரிப்பு



# வாழ்க்கை...

கருவறை தொடக்கம்
கல்லறை வரைக்கும்
சொன்னால் வெட்கம்
சொல்லாவிட்டால் துக்கம்

வெட்கம் ஒரு பக்கம்
துக்கம் ஒரு பக்கம்
வேதனை ஒரு பக்கம்
சோதனை ஒரு பக்கம்
சாதனை ஒரு பக்கம்

இலட்சியம் ஒரு பக்கம்
அலட்சியம் ஒரு பக்கம்
இதுதான் எமக்கு
இறைவன் தந்த வாழ்க்கை



திருமதி.இ.தனபாலசிங்கம்
முக்கரவத்தை,
வல்வெட்டித்துறை.

## கவிதைக் கலசம்

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
அரசியல் இலக்கியம் கவிதை கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா

## ச-பானா



**கனவு** - நிறையச் சம்பாதிக்க வேண்டும். அப்படி சம்பாதித்து சிலரையாவது படிக்க வைக்க வேண்டும். ஏன்னென்றால், நான் என்னுடைய ஸ்கூல் நாட்களில் இருந்து ஸ்பான்சர் ஷிப்லதான் படிச்சிருக்கேன்.

**பலவீனம்** - எல்லாவற்றுக்கும் கொஞ்சம் எமோஷனல் ஆகிவிடுவேன். சீக்கிரத்தில் அழ வந்துவிடும். இதை மாற்ற வேண்டும் என்று நினைக்கின்றேன். ஆனால் முடியவில்லை.

**பலம்** - காம்ப்ரமைஸ், கன்வின்ஸ் என்கின்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் எனக்குப் பிடிக்காத வார்தை என்று சொல்லலாம். ஒரு விடயத்துக்கு ஆசைப்பட்டால் அது நடந்தே ஆகவேண்டும் என்று நினைப்பேன். இதை அடம் என்று கூடச்சொல்வார்கள். ஆனால் இந்தக் குணம் ஒரு தைரியத்தைத் தருகிறது.

**வாழ்க்கை சொல்லித் தந்தது** - எவ்வளவுதான் பெரிய சர்க்கிள் நம்மைச் சுற்றி இருந்தாலும் கடைசியில் குடும்பம்தான்கூட நிற்கும் என்கிறதுதான்.

**செம்பருத்தி** - என்னால் மறக்க முடியாத புரொஜெக்ட். எனக்கு அடையாளம் தந்தது அதுதான். நிறைய ரசிகர்களையும் தந்தது. அந்த சீரியல் மூலமாக எனக்குக் கிடைத்த ஒரு வி.ஐ.பி. ரசிகர் ப்ளஸ் நலன்விரும்பி எம்.எஸ். பாஸ்கர் சார். இன்றைக்கு நான் அவர்களுடைய குடும்பத்தில் ஒருத்தி. தீபாவளி, பொங்கல் என்றால் அவர்கள் வீட்டில் இருந்து ஸ்வீட் மறக்காமல் வந்துவிடுகிறது.


**நிறைவேறாத ஆசை** - விஜய் அண்ணா, பிருதிவிராஜ் சார்கூட நடிக்க வேண்டும் என்றுதான்.



**சூர்யாவின்** "கருப்பு" படத்தை பொங்கல் விருந்தாகக் கொண்டு வரத் திட்டமிடுகின்றனர். வெங்கி அட்லூரியின் இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் "சூர்யா 46" படப்பிடிப்பு மும்முரமாக நடந்துவருகிறது. டிசம்பருக்குள் மொத்தப் படப்பிடிப்பும் நிறைவடைந்துவிடும். அடுத்து மலையாள இயக்குநர் ஜீத்து மாதவன் படத்திற்கு வருகிறார் சூர்யா. இப்போது ஸ்கிரிப்ட் வேலைகளில் இருக்கிறார் ஜீத்து. அதில் ஹீரோயினாக நஸ்ரியாவைக் கேட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.



**ராஜமௌலி** இயக்கத்தில் மகேஷ் பாபு நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு இந்தியாவின் பல மலைப் பிரதேசங்களில் நடந்தது. இப்போது மொத்த யூனிட்டையும் கூட்டிக்கொண்டு கென்யா நாட்டுக்குப் போயிருக்கிறார் ராஜமௌலி. 50 நாட்கள் அங்கே படப்பிடிப்பு நடக்கிறது. போகின்ற போக்கைப் பார்த்தால் இரண்டு அல்லது மூன்று பாகங்களாகக்கூட விரிவடையும் எனப் பேசிக்கொள்கிறார்கள். அடுத்த படங்களின் வரிசையை யோசிக்காமல் மகேஷ்பாபு இதில் ஆழ்ந்துவிட்டார்.



**ராகவா லாரன்ஸ்** சத்தம் காட்டாமல் தனது "காஞ்சனா-4" படத்தின் பெரும்பாலான காட்சிகளை எடுத்து முடித்துவிட்டார். சினிமா முக்கியஸ்தர்களுக்குப் போட்டுக் காட்டியதில் படத்தைப் பற்றி உற்சாக வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள். சிறப்புத் தோற்றத்தில் ராஷ்மிகா மந்தனா நடிப்பார் என்று முன்னர் சொல்லப்பட்டது. இப்பொழுது நிஜமாகவே ராஷ்மிகா, ஹைதராபாத் ஷூட்டில் இணைந்துவிட்டார். "நான் லாரன்ஸ் மாஸ்டரின் நடனத்திற்குப் பெரும் ரசிகை" என எல்லா நேர்காணல்களிலும் அவர் சொல்லி வருவது குறிப்பிடத்தக்கது.

**மக்கள் நாயகன் ராமராஜன்**

சொந்த ஊரான மேலூருக்கு சமீபத்தில் வந்திருந்தார். அங்குள்ள கணேஷ் திரையரங்கத்துக்குச் சென்றார். 80களில் குமரேசனாக இருந்தபோது இங்கு டிக்கெட் கொடுப்பவராகவும், புரொஜெக்டர் ஆபரேட்டராகவும் வேலை செய்துள்ளார். கோடம்பாக்கத்தில் அவர் கொடி பறக்கப் பாதை ஏற்படுத்திக் கொடுத்ததை உரிமையாளர் முருகனுடன் உற்சாகமாக நினைவுகூர்ந்ததோடு, நவீனமாக்கப்பட்ட கணேஷ் சினிமாஸை பழைய குமரேசனாக ஆர்வத்தோடு சுற்றிப் பார்த்தார்.



**அப்துல் கலாமின்**

பயோபிக் ரெடியாகிறது. கலாம் வேடத்தில் தனுஷ் நடிக்கிறார். இதற்காக ஸ்பெஷல் போட்டோ செஷன் நடந்திருக்கிறது. அதில் தனுஷின் படங்களைப் பார்த்தவர்கள் ஆச்சர்யப்பட்டார்களாம். "அவ்வளவு பொருத்தமாக இருக்கிறது" எனப் படத்தின் இயக்குநர் ஓம் ராவத் மிகவும் பெருமிதத்தோடு சொல்லியிருக்கிறார். இவர், பிரபாஸின் "ஆதி புருஷ்" படத்தை இயக்கியவர். கலாமின் பழக்கவழக்கங்களை நன்கு கேட்டுத் தெரிந்துகொள்ள, அவரின் உறவினர்களை விரைவில் தனுஷ் சந்திக்க உள்ளார்.





**தெலுங்கில்** முன்னணியில் இருந்துவரும் ஶ்ரீலீலா, சிவகார்த்திகேயனின் "பராசக்தி" மூலம் தமிழில் அறிமுகமாக இருக்கிறார். இதற்கிடையே கன்னடத்தில் ஶ்ரீலீலா நடித்த "கிஸ்" என்ற படம், தமிழில் புதுமுகங்கள் நடிப்பில் "கிஸ் மி இடியட்" என்ற பெயரில் ரீமேக் ஆகியிருக்கிறது. ஒரிஜினலை இயக்கிய ஏ.பி.அர்ஜுன், தமிழிலும் இயக்கியுள்ளார்.




விஜயின் "கோட்" படத்திற்குப் பின் டோலிவூட்டிலேயே கவனம் செலுத்திவருகிறார் மீனாட்சி சௌத்ரி. அங்கே "லக்கி பாஸ்கர்", "சங்கராந்திகி வஸ்துணம்" என அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்துவருவதால் குஷியில் இருக்கிறார். அடுத்து தனுஷ் - ராஜ்குமார் பெரியசாமி இணையும் படத்தில் கமிட் ஆவார் என்கிறார்கள்.



**ஷாருக்கான்** மகன் ஆர்யன் கான் பொலிவூட்டில் இயக்குநராக அறிமுகமாகியிருக்கிறார். "பட்ஸ் ஆப் பாலிவுட்" என்ற பெயரில் எடுக்கப்பட்டுள்ள அந்த வெப்சீரிஸ் டீஸரை சமீபத்தில் ஷாருக்கான் வெளியிட்டிருந்தார். இதனை எழுதி இயக்கியிருக்கிறார் ஆர்யன். இந்த வெப்சீரிஸில் வரக்கூடிய ஒரு பாடலை பஞ்சாப் பாடகர் தில்ஜித் தோசன்ஜூடன் இணைந்து பாடியிருக்கிறார். அமிர்கான், ராஜமௌலி, திஷா பதானி, கரண் ஜோஹர், ஷாருக்கான் என நிறைய பேரை கேமியோவில் நடிக்க வைத்துள்ளார். இப்போதே எதிர்பார்ப்பு எகிறியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை விதைப்பின் சூத்திரதாரிகள் யார்?




12 மில்லிகிராம் போதையினை தனது உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றத்துக்காக கடந்த வாரம் சிங்கப்பூரில் ஒரு இளைஞனுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு மலேசியாவைச் சேர்ந்த இளைஞனொருவன் சிங்கப்பூரில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு சோதனையிட்டபோது அவரின் உடமையில் 15 மில்லிக்கிராம் உயிர் கொல்லி கெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

உடன் விசாரணை மேற்கொண்ட சிங்கப்பூர் பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர் உடமையில் போதைப்பொருளை வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதன் பெயரில் குற்றவாளியாகக் கருதப்பட்டு அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப் பட்டது.

இளைஞனின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மனித உரிமை அமைப்புக்கள் அவரின் தூக்கை ரத்துச் செய்யுமாறு சிங்கப்பூர் அரசிடம் கோரிக்கை வைத்திருந்தது.

ஆயினும் அவை எவற்றை யும் கருத்தில் எடுக்காத சிங்கப்பூர் அரசு, அவருக்கு தூக்குத்தண்டனை அழித்தது. சிங்கப்பூரில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு தூக்குத் தண்டனையே வழங்கப்படுகிறது.

குறித்த நடைமுறையை மாற்ற முடியாது. ஒரு கிராம் என்றாலும் ஒரு கிலோக்கிராம் என்றாலும் போதை போதையே, குற்றம் குற்றமே என்று திட்டவட்டமாகக் கூறியதுடன் கடந்த வெள்ளிக்கிழமை அந்த இளைஞனுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றியுள்ளது.

குறித்தவிடயம் இளைஞனில் பரிதாபம் ஏற்படுகின்றதாயினும் அது அந் நாட்டின் சட்டம்.

இதில் இளகல் தன்மையை சிங்கப்பூர் மேற்கொண்டிருக்குமாயின் அதன் அருகில் உள்ள மலேசியாவை விட பன்மடங்கு போதைக்குரிய நாடாக சிங்கப்பூர் மாற வாய்ப்புக்கள் அதிகம். இதன் காரணமாகவே குறித்த தூக்குத் தண்டனையை சிங்கப்பூர் அரசு மேற்கொண்டு போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு பெரும் அச்சுறுத்தலை விடுத்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் சிங்கப்பூரிற்குள் போதைப் பாவனையினை மேற்கொள்ள எவருக்கும் பயம் வரும் என்பதே இதன் பிரதான குறிகாட்டி.

2009 போருக்குப் பிற்பட்ட காலத்திலேயே இலங்கை போதைப் பொருட்களின் சொர்க்க பூமியாக மாறியுள்ளது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் விடுதலைப் புலிகளின் காலத்தில் புனித பூமியாகவே இருந்தது என்பதில் பெருமை கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலம் போதை என்பது அறவே இல்லை என்றே கூறிவிடலாம். அதற்கு அவர்களின் தண்டனைகளும் ஒரு காரணமாக இருந்த போதிலும் அக்காலத்தில் சமூக அக்கறை, தேச பக்தி என்பன இளைஞரிடத்தே மனப்பூர்வமாக இருந்தது என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இறுதி யுத்தத்தில் தமிழினம் தனது சமூகக் கட்டமைப்பை தகர்த்து விட்டு எதையும் இலகுவில் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்த வேளை இலகுவில் போதை விதைப்பு தாராளமாக நடந்தேறின என்ற உண்மையை யாராலும் மறுத்து விடமுடியாது.

மிகப்பெரும் நாடு மீட்புக்கான போரை நடத்தி அதில் வலுவிழந்த சமூகத்திடம் நிச்சயம் அது தொடர்பான சிந்தனை இருந்து கொண்டே இருக்கும். அதை இல்லாதொழிப்பதற்கு பேரினவாத சக்திகளால் கையாளப்பட்ட யுத்தியே போதை.

18-20 வயது இளைஞனின் கைக்கு சர்வ சாதாரணமாக போதைப்பொருள் எவ்வாறு கிடைக்கும் என்பதை ஒன்றுக்கு நூறு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இனியொரு முறை தமிழ் இளைஞர்கள் நாடு மீட்பு பற்றிச் சிந்தித்து விடக்கூடாது என்ற குறுகிய சிந்தனையின் வெளிப்பாடு இன்று எம் இளைஞரின் வாழ்வையும்-வாழ்வியலையும் புரட்டிப் போட்டுவிட்டது.

"நஞ்சென்று தெரிந்தும் அந்த நாசத்தை ஏன் தொட்டாய்" என போதைக்கு அடிமையான இளைஞரிடம் வினவிய போது. அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்று தெரியாமல் தொட்டு விட்டேன். இன்று அது இல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை என அந்த இளைஞன் கூறும்போது அவனின் முகத்தில் தென்பட்ட குற்ற உணர்வுக்கு போதையை விதைத்தவர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் போதைவஸ்தை ஒழிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலில் வழங்கிய வாக்குறுதியில் ஊழல் ஒழிப்பு, போதை ஒழிப்பு என்பன மிக முக்கியமானது.

இந்நிலையில் இவ் இரண்டையும் ஒழித்துக்கட்ட அரசு முழுமூச்சாய் செயற்படுவது அதன் அண்மைக் கால நடவடிக்கைகளினூடாக நன்றாகப் புலப்படுகிறது.

ஆயினும் இவ்விரு விடயங்களும் அரசியல்வாதிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேணி வருவதால் இவற்றை அரசியல் பழிவாங்கல்கள் என சர்வசாதரணமாகக் கூறிக் கடந்து செல்லப் பார்க்கிறார்கள் அரசியல்வாதிகள் சிலர்.

அண்மையில் கண்டியில் மிகப் பெரிய ஐஸ்போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இதில் ஐஸ்போதைப்பொருள் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் பல்லாயிரம் கிலோக்கிராம் மீட்கப்பட்டது.

இது இலங்கையில் மீட்கப்பட்ட போதைவஸ்துக்களில் மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதாவது இது ஒரு போதை வஸ்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இயங்கி வருகின்றது என்பதை கண்டறிந்துள்ளதுடன் குறித்த தொழிற்சாலையினை பொதுஜனப் பெரமுனவின் கட்சி உறுப்பினர் ஒருவரே நடத்தி வந்ததாகவும் அவரை மிக விரைவில் கைது செய்வோம் என்றும் கூறினர்.

இதை மறுத்த பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்குறித்த நபருக்கும் எமது கட்சிக்கும் தற்போது எந்தத் தொடர்புகளும் இல்லை.

அவரை எமது கட்சியிலிருந்து எப்போதோ நீக்கி விட்டோம். எனவே அபாண்டமான பழியை எமது கட்சி மீது போட்டு, அரசியல் பழிவாங்கலை மேற்கொள்ள முனைகிறது அநுர அரசு என குற்றம் சாட்டியுள்ளார்.

இங்கு தான் நாம் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது உண்மையில் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் அக் கட்சியில் இருந்து ஏன் நீக்கப்பட்டார்.

அவ்வாறான நீக்கம் தொடர்பில் எழுத்தாதாரங்கள் ஏதும் உண்டா என்பதே அது.

மிகப்பெரும் ஐஸ்போதைப்பொருள் தொழிற்சாலையினை ஒரு தனி மனிதனால் நடத்த முடியுமென்பது சர்வ சாதாரணமான விடயமல்ல.

இவ்வாறான கேள்விகளுக்குப் பதில் கிடைத்தால் வடக்கு-கிழக்கு இளைஞரிடத்தே போதை விதைப்பை மேற்கொண்டவர்கள் யார் என்ற பதில் கிடைத்து விடும்.

அவ்வாறு குற்றம் நிரூபிக்கப் பட்டவர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் வழங்கிய தண்டனை போல தண்டனைகளை வழங்கினாலே நாட்டின் போதையை ஒழிக்க முடியும். ஏனெனில் அந்தளவிற்கு போதை யின் வேர் மிக ஆழத்திற்குச் சென்று விட்டது.

தண்டனைகள் கடுமையாக இருந்தால் குற்றங்கள் குறையும். இதுவே போதை ஒழிப்பை முற்றிலும் வெற்றி பெற வைக்கும்.

● அபிமன்யு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் முல்லை.மாணவிகள் சாதனை



2025 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டைப் போட்டி இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் TMA அக்கடமியின் ஊடாக மாவட்ட குத்துச்சண்டைப் பயிற்றுனர் தேசிந்தன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மு/இரணைப்பாலை றோ.க.ம.வி மாணவி மோகனதாஸ் அபிசாளினி 16 வயதுக்குட்பட்ட 50-52 கிலோ பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று பாடசாலைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இது குறித்த பாடசாலை வரலாற்றில் தேசிய ரீதியில் பெறப்பட்ட முதல் பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை காலி மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற 49 ஆவது தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் அதே TMA அக்கடமியின் பயிற்சியில் பங்கேற்ற இந்திரசேகரம் லதுர்சனா அவர்கள் 50-52 கிலோ பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இரு மாணவிகளின் இச் சிறப்பான சாதனை, மாவட்டத்தில் குத்துச் சண்டை விளையாட்டின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-299)

## ஜொலிஸ்ரார் கிண்ணத்தொடர்

# சென்றலைட்ஸ் அணி சாதனையுடன் 2 ஆவது சுற்றுக்குத் தகுதி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்கான 2 ஆவது தகுதிச்சுற்றுத்தொடர் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி தகுதிச் சுற்றுக்கான போட்டியில் காரைநகர் கோவளம் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியிருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொண்ட போது முதலில் துடுப்பெடுத்தாடிய காரைநகர் கோவளம் அணி 9.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 19 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.

1983 ஆம் ஆண்டு மேற்படி தொடர் ஆரம்பமான காலத்தில் இருந்து இன்றுவரை ஆகக்குறைந்த ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தமை இதுவே முதல் தடவையாகும்.

துடுப்பாட்டத்தில் ஜெ.றொபின்சன் 11 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றிருந்தார். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணியைச் சேர்ந்த டார்வின் 3 விக்கெட்டுகளையும், ஜெரிக்துஷான் 3 விக்கெட்டுகளையும், நிலக்ஷன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். 20 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 1.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. அணி சார்பில் ஜேம்ஸ் ஜான்சன் அதிகபட்சமாக 17 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

தெஹிவளையில் மன நிறைவோடு மற்றுமோர் புதுமனைப் பிரவேசம்
இல 14, School Avenue, Dehiwala இல் அமையப் பெறும் எமது தொடர்மாடித் தொகுதி HAMPDEN HOMES 04 இல் இன்றே உங்கள் எதிர்கால இல்லத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்



✓ 2, 3, 4 படுக்கையறைகள் கொண்ட 37 தொடர்மாடி சொகுசு இல்லங்கள்
✓ நீச்சல் தடாகம் மற்றும் உடற் பயிற்சி நிலையம் 960 Sq.Ft 1,070 Sq.Ft
✓ பிரத்தியேக வாகனத் தரிப்பிடம் 1,225 Sq.Ft 1,410 Sq.Ft 1,800 Sq.Ft 1,950 Sq.Ft
✓ 24 மணிநேர பாதுகாப்புச் சேவை மற்றும் பல வசதிகளுடன்...
HAMPDEN PROPERTY DEVELOPERS (PVT) LTD
11-1/4, Pinto Place, Colombo 06, Sri Lanka
hmpeng2009@gmail.com www.hmpeng.com
+94 773 315 413
+94 777 307 103
(C-294)




(C-288)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை... அட்டூழியம்... ஆக்கிரமிப்பு...



## அடங்காத இஸ்ரேலின் இரத்த வெறி!



கடந்த இரண்டு ஆண்டுகளாக, திறந்தவெளி சிறைச்சாலை போலக் காட்சியளிக்கிறது காசா நகரம். எங்கு பார்த்தாலும் இடிபாடுகள். எப்போதும் வெடிகுண்டுச் சத்தம். உண்ண உணவின்றித் தவிக்கும் மக்கள் எனப் பூமியின் நரகமாக மாறியிருக்கிறது காசா பகுதி. ஹமாஸ் படையைத் தீர்த்துக்கட்டவே இந்தப் போர் என்று சொன்ன இஸ்ரேல், தற்போது, ஒட்டுமொத்த பாலஸ்தீனர்களையும் ஒழித்துக்கட்ட முயன்று கொண்டிருக்கிறது.

கடும் எதிர்ப்புகளையும் மீறி காசாவின் வடக்குப் பகுதியை ஒட்டுமொத்தமாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் தீவிரமாகக் களமிறங்கியிருக்கிறது இஸ்ரேல் இராணுவம்!

**விரட்டியடிப்பும்... ஆக்கிரமிப்பும்!**

இடிபாடுகளின் குவியலுக்கு நடுவே கண்ணீரோடு காலம் தள்ளிவந்த காசா மக்களை, இரக்கமேயின்றி அங்கிருந்து வெளியேறச் சொல்லியிருக்கிறது இஸ்ரேல். இஸ்ரேலின் எல்லையை ஒட்டியுள்ள காசாவின் வடக்குப் பகுதியை முழுமையாக ஆக்கிரமிக்கத் திட்டமிட்டிருக்கிறார் அந்த நாட்டின் பிரதமர் நெதன்யாகு. இதனால், கடந்த சில நாட்களாகவே அங்கு அதிதீவிர வான்வழித் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல். இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவம் தரை வழியாக வடக்குப் பகுதியை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறது. வான்வழித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமலும், தரைவழியாக இஸ்ரேல் படை முன்னேறி வருவதாலும், பாலஸ்தீன மக்கள் காசாவின் தெற்குப் பகுதியை நோக்கிக் கால்நடையாகச் செல்லத் தொடங்கியிருக்கின்றனர்.

"போரால் ஏற்பட்ட வலியைவிட, ஆயிரம் மடங்கு வலியோடு எங்கள் மண்ணைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் வாழ்ந்த, எங்களை வளர்த்தெடுத்த இந்த நகரம் இனி எங்களுக்குச் சொந்தமானதில்லை என்கிறது இஸ்ரேல். இனி எங்கள் வாழ்க்கை என்னவாகுமோ?!" என்ற புலம்பலோடு, பாலஸ்தீனர்கள் காசாவின் தெற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றனர்.

நெதன்யாகுவின் இந்தத் திட்டத்தை, துருக்கி, எகிப்து, கட்டார் உள்ளிட்ட இஸ்லாமிய நாடுகள் கடுமையாக எதிர்க்கின்றன. ஐ.நா சபையும், இருதரப்பு ஒப்பந்தத்தையும், சர்வதேசச் சட்ட விதிகளையும் மீறி, காசாவை ஆக்கிரமிக்க நினைக்கும் இஸ்ரேலின் திட்டம், பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு எதிரானது. இதை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று எச்சரித்தது.

**இனப்படுகொலைதான் - அடித்துச் சொன்ன ஐ.நா!**

இரண்டாம் உலகப் போரில், ஹிட்லர் தலைமையிலான நாஜிப் படை சுமார் 60 இலட்சம் யூதர்களைக் கொன்று குவித்தது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னரே, இனப்படுகொலை என்ற வார்த்தை பிறந்தது. நாஜி வதை முகாமிலிருந்து தப்பித்த யூதர்கள் பலரும், இன்று இஸ்ரேலாக இருக்கும் அப்போதைய பாலஸ்தீனப் பகுதியில் தஞ்சமடைந்தனர். பின்னர், பாலஸ்தீனத்தின் ஒருபகுதி, "இஸ்ரேல்" என்ற பெயரில் யூதர்களின் நாடானது. இன்று அந்த இஸ்ரேல் நாட்டை ஆட்சி செய்யும் நெதன்யாகு, பாலஸ்தீனத்தில் எஞ்சியிருக்கும் காசா பகுதியில் வசிக்கும் மக்களை இரத்த வெறியோடு இனப்படுகொலை செய்து கொண்டிருக்கிறார்.

"இஸ்ரேல் செய்வது இனப்படுகொலை" என்று சில நாடுகளும், பல பத்திரிகையாளர்களும் சொல்லிவந்த நிலையில், ஐ.நாவும் "இது இனப்படுகொலைதான்" என்பதை ஆதாரங்களுடன் பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் அமைத்த விசாரணைக்குழு ஒன்று, இது தொடர்பாக ஆய்வுசெய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளைக் குறிவைத்துக் கொலை செய்திருக்கிறது இஸ்ரேல் இராணுவம். காசாவில் குழந்தை பிறப்பைத் தடுக்கும் நோக்குடன், அங்கிருக்கும் மிகப்பெரிய கருத்தரிப்பு மையத்தில் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியிருக்கிறது. மக்கள் வசிக்கும் இடங்கள், மருத்துவமனைகளில் தாக்குதல் நடத்தியது இன அழிப்புக்கான ஆதாரங்களாக இருக்கின்றன. காசா மக்களுக்கு உணவு கிடைக்கவிடாமல் செய்து, பட்டினியில் தள்ளி, அவர்கள் உயிரைப் பறிக்கும் நோக்கில் செயற்பட்டிருக்கிறது இஸ்ரேல்.

**அடங்குவாரா நெதன்யாகு?**

இஸ்ரேல் செய்வது இனப்படுகொலைதான் என்று தெரிந்தும், இந்தப் போரைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறது அமெரிக்கா. உக்ரைனில் போர் புரியும் ரஷ்யாவைக் கடுமையாக எதிர்க்கும் ட்ரம்ப், இஸ்ரேல் செய்யும் கொடூரங்களைக் கண்டுகொள்வதில்லை. பெயரளவுக்குக் கண்டனம் மட்டும் தெரிவித்து விட்டு, இந்தப் போரை ஆதரித்துக்கொண்டிருக்கிறது அமெரிக்கா.

பிரிட்டன், கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள், பாலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரித்திருக்கின்றன. சில பொருளாதாரத் தடைகளையும் இஸ்ரேல்மீது விதித்திருக்கின்றன.

கடுமையான பொருளாதாரத் தடைகளைப் பல நாடுகளும் இஸ்ரேல் மீது விதிக்க வேண்டும். அமெரிக்காவும் கண்மூடித் தனமாக இஸ்ரேலை ஆதரிப்பதைக் கைவிட வேண்டும். இது இரண்டும் நடந்தால் மட்டுமே நெதன்யாகுவின் இரத்த வெறியை அடக்க முடியும் என்கிறார்கள் சர்வதேச அரசியல் வல்லுநர்கள்.

நெதன்யாகுவுக்கு எதிராக அவரது வீட்டின் முன்பாக இஸ்ரேல் மக்கள் பலரும் போராட்டம் ஒன்றை நடத்தினர். பிணைக்கைதிகளை மீட்டுவர வழி செய்யாமல், காசாவை ஆக்கிரமிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார் நெதன்யாகு. அவர் பதவி விலக வேண்டும்.

போரை நிறுத்திவிட்டு, பிணைக் கைதிகளை மீட்டு வருவதற்கான முயற்சியில் இறங்க வேண்டும் என்கிறார்கள் போராட்டக் காரர்கள்.

கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் கண்ணீருக்கும் இரத்தத்துக்கும் இரங்காத நெதன்யாகு வெளிநாட்டிலிருந்து வரும் அழுத்தங்களைக் கண்டுகொள்ளாத நெதன்யாகு, உள்நாட்டிலிருந்து கிளம்பியிருக்கும் சொந்த மக்களின் குரலுக்காவது மதிப்பளிப்பாரா..?

## தெளிவே என் சிந்தனையுள்... 29

சீக்கிரம் பணக்காரர் ஆகவேண்டும் என்ற ஆசை பலருக்கும் இருக்கிறது. துறவி ஒருவரிடம் வந்தான் ஒரு சூதாடி. "சாமி, உங்களுக்கு எல்லாம் தெரியுமாமே... சூதாட்டத்தில் சீக்கிரம் பணம் சம்பாதிப்பது எப்படி என்பதும் தெரியுமா?" என்று கேட்டான்.

துறவி அவனை ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு கொய்யா மரத்தில் பழங்கள் தொங்கின. "இந்த மரத்தில் ஒரே ஒரு பழத்தைப் பறிக்க வேண்டும்.

ஆனால் உன் கண்களை மூடிக்கொண்டு பறிக்க வேண்டும். அப்படிச் செய்தால் பதில் சொல்கிறேன்" என்றார்.

சூதாடி கண்களை மூடி, கையை நீட்டி ஒரு பழத்தைப் பறிக்க முயன்றான். ஆனால், அவன் கையில் ஓர் இலை மட்டுமே கிடைத்தது. மீண்டும் முயன்றபோது ஒரு கிளை பிடிபட்டது. எரிச்சலாகி, "கண்களை மூடிக்கொண்டு எப்படிப் பறிக்க முடியும்? இதற்கும் என் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?" என்றான்.

துறவி புன்னகைத்து, "நீ விரும்பும் சூதாட்டமும் இதைப் போன்றதுதான். கண்மூடித்தனமாகப் பந்தயம் வைத்து வெற்றிபெற விரும்புகிறாய்.

கண்களைத் திறந்து மரத்தை அறிந்து, பழம் எங்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு பறிக்க முயல வேண்டும். ஒருவன் வாழ்வில் செல்வம் பெற உழைப்பும் புரிதலும் தெளிவும் தேவை.

அதை விடுத்து கண்மூடித் தனமாகச் சூதாடினால் அது தவறு" என்றார்.

**அன்பானவர்களே!**

எம்மில் பலரும் உண்மை, நேர்மை, அறம் தவறி தவறான வழியில் பணம் சம்பாதிக்க முற்படுகின்றனர். அது நிச்சயம் படுகுழியில் வீழும் செயலே.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

464

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆண் பிள்ளைகளின் பிரச்சினைகள்...

பிறந்த ஆண் குழந்தைகளில் நாம் விதையின் இறக்கத்தை அவதானிக்க முடியும். சில குழந்தைகளில் விதை இறங்காத நிலை காணப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். மீண்டும் ஆறு வாரங் களுக்கு பின்னர் குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் சென்று உடற்பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

அப்போதும் விதையானது, விதைப்பைக்குள் இல்லை எனில் மருத்துவர்கள் சத்திர சிகிச்சை செய்ய பரிந்துரைப்பார்கள். அந்த நேரம் சத்திர சிகிச்சை மருத்துவர்கள் குழந்தையை பரிசோதித்து பார்க்கும் போது, விதை கீழ் இறங்கவில்லை எனில் மூன்று அல்லது ஆறு மாதங்கள் வரை காத்திருக்க முடியும்.


ஆறு மாதங்களின் பின்னரும் விதை இறங்கவில்லை எனில் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். ஏன் விதை இறக்கத்திற்கு சத்திர சிகிச்சை அவசியம் என்று பார்த்தால், விதை தானாகவே இறங்குவதுதான் உடலின் தொழிற்பாடு.

அப்படி விதை இறங்கவில்லை எனில், அதற்கு ஏதாவது ஹோர்மோன் பிரச்சினை அல்லது மரபுரிமை பாதிப்புகள் இருக்கலாம். ஆனால், அதைப் பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை.

விதையை சத்திர சிகிச்சை மூலம் விதைப்பைக் குள் பொருத்த முடியும். இந்த சத்திர சிகிச்சை ஏன் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்னும் ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களோ பொறுத்திருந்து பார்க்கலாம் என நீங்கள் நினைக்கலாம். ஆனால், விதை வயிற்றிற்குள் இருக்கும் போது அதன் தொழிற்பாட்டுத் தன்மை குறைவடையும். ஏனெனில், விதையானது விதைப்பைக் குள் இருக்கும் போது தான் வெப்ப நிலை குறைவாக காணப்படும்.

அதனால் விதையின் தொழிற்பாடு சாதாரணமாக இருக்கும்.



விதை வயிற்றிற்குள் இருக்கும் போது, உடல் வெப்பநிலையில் இருப்பதால் விதையின் தொழிற்பாடு பாதிக்கப்படும். விதையின் சாதாரண தொழிற்பாட்டை பேண வேண்டுமாயின், ஆறு மாதங்கள் தொடக்கம் ஒரு வயதிற்குள் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். ஒரு வயது வரும் போது, விதையானது விதைப் பைக்குள் இருந்தால் தான் விதை யின் தொழிற்பாடு சாதாரணமாக இருக்கும்.

இதைவிட, விதை வயிற்றிற்குள் இருந்தால் கட்டிகள் அல்லது புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும். விதையானது விதைப்பைக்குள் இருந்தால் கட் டிகள் ஏற்படாது. அதோடு, விதை யின் அளவு பெரிதாகும் போது அதை உணரக்கூடியதாக இருக் கும். வயிற்றுக்குள் இருக்கும் போது அதனை உணர முடியாது. கட்டிகள் ஏற்பட்டு எல்லா இடமும் பரவிய பின்னரே தெரிய வரும். எனவே, விதை இறக்கம் இல்லாத குழந்தை களுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். குழந்தைக ளில் விதையின் சமச்சீர் அற்ற தன்மை போன்ற அசாதாரண நிலைகள் காணப்படுமாயின் நீங்கள் உட னடியாக மருத்துவரை நாட வேண்டும். அத்துடன் சத்திர சிகிச்சை செய்வது தான் இதற்கான தீர்வு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சில ஆண் குழந்தைகளில் ஆணுறுப்பின் முன் தோல் பின் பக்கமாக போகாமல் இருக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் பயப்பட வேண்டிய அவசி யமில்லை. நீங்கள் குழந்தை களைப் பராமரிக்கும் போது அவர் களின் ஆணுறுப்பு பகுதியை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் கிருமித்தொற்று ஏற்படுவதை தடுக்க முடியும்.

முன் தோல் பகுதி எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. அடிக்கடி சிறுநீர்க் கிருமித் தொற்று ஏற்படுமாயின் நீங்கள் முன் தோலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அப்படி இருந்தும் சிறுநீரக கிருமித் தொற்று இருக்குமாயின் நீங்கள் வைத்தியரை நாட வேண்டும். முன் தோல் பிரச்சினைகள் காணப்படும் போது, அந்த இடம் சிவந்து காணப்படும் அல்லது மஞ்சள் நிற திரவம் வெளியேறிக் கொண்டிருக்கும். இவ்வாறான அறிகுறிகள் காணப்படும் போதும் நீங்கள் வைத்தியரை நாட வேண் டும். கிருமித் தொற்று அடிக்கடி ஏற்படுமாயின், முன் தோல் புண் ணுள்ளதாக அல்லது தளும்புள்ளதாக மாறும்.

இதன் போது முன் தோலின் துவாரம் மறைக்கப்படும். இவ்வாறு ஏற்படுமாயின் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் மட்டும் தான், முன் தோல் அகற்றும் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில், இந்நி லையில் முன் தோல் சாதாரண முறையில் இருக்காது. மாறாக, தளும்பாக மாறி, சிறுநீர் கழிக்கும் போது அவ்விடத்தில் வலியை ஏற்படுத்தும். அதோடு அவ்விடம் சிவந்து புண்ணை ஏற்படுத்தும். இந்நிலையில் கட்டாயமாக சத்திர சிகிச்சை செய்து முன் தோலை அகற்ற வேண்டும்.

முன் தோல் நீளமாக இருக்கும் போது அல்லது முன் தோல் பின்பக்கம் போகாமல் இருக்கும் போது, சிறுநீர் கழிக்கும் சந்தர்ப்பத்தில் முன் தோல் பலூன் போல் வரும். இது சாதாரணமான ஒரு விடயம் ஆகும். எனவே, இவ்வாறான நிலைகளில் குழந்தைகளை கவனமாக பராமரிக்க வேண்டும்.

Dr.இரஞ்சிததர்சினி வசீகரன்
குழந்தை நல சத்திர
சிகிச்சை நிபுணர்,
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட நெதன்யாகு!

## உலகத் தலைவர்கள் வெளிநடப்பு

(நியூயோர்க்)

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது அவைக் கூட்டத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு உரையாற்றுவதைப் புறக்கணித்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் அதி காரிகள் அவையில் இருந்து வெளிநடப்பு செய் துள்ளனர்.**



ஐ.நா. அமைப்பின் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொது அவைக் கூட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐ.நா. அமைப்பின் பொது அவைக் கூட்டத்தில் காஸாவில் உள்ள பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் வன்முறைகளை இனப்படுகொலை எனக் குறிப்பிட்டும் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகுவைக் கைது செய்ய வேண்டுமெனவும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் தங்களது உரையில் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது அவைக் கூட்டத்தில் உரையாற்றினார்.

இதன் போது, அவர் தனது உரையை ஆரம்பித்த உடன் அங்கிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இருப்பினும், அவையில் மீதமிருந்த சில பிரதிநிதிகளின் முன்னிலையில் பெஞ்சமின் நெதன்யாகு தனது உரையை ஆற்றினார்.

இதில், சுமார் 45 நிமிடங்கள் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் படைகளுக்கு எதிரான இஸ்ரேலின் வெற்றிகளைக் குறித்து அவர் உரையாற்றியுள்ளார்.

இந்தநிலையில், பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலையில் பங்கெடுக்க விரும்பவில்லை என்பதாலும் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும் அவர்கள் வெளிநடப்பு செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, பெஞ்சமின் நெதன்யாகு உரையின் போது ஒன்றாக வெளியேற வேண்டும் என அவர்கள் அனைவரும் முன்கூட்டியே திட்டமிட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக ஐ.நா.வின் இந்தப் பொது அவைக் கூட்டத்தில் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மேற்கு கரையை இஸ்ரேலுடன் இணைக்க அனுமதிக்கமாட்டேன்

## ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

"மேற்குகரைப் பகுதிகளை இஸ்ரேலுடன் இணைக்க அனுமதிக்கமாட்டேன். இஸ்ரேல் இந்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கமுடியாது. இதுவரை நடந்தது போதும். இந்த நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நேரம் வந்துவிட்டது" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.


பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் மேலும் இஸ்ரேலிய குடியேற்றத்தை விரிவுபடுத்தும் சர்ச்சைக்குரிய E1 குடியேற்ற விரிவாக்க திட்டத்தை இஸ்ரேல் அரசு தொடங்கியுள்ளது இஸ்ரேலிய்குடியேறிகளுக்கு 3,000 புதிய வீடுகளைக் கட்டுவதற்கான திட்டமே E1 ஆகும்.

இதற்கிடையே பாலஸ்தீனம் என்று ஒரு நாடு கிடையாது என்ற இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தொடர்ந்து கூறி வருகிறார்.

இந்நிலையில் மேற்கு கரையை இஸ்ரேல் இணைத்துக்கொள்ளுமா? என்ற கேள்விக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (நி)

# அளவுக்கதிகமான யுரேனியத்தை வைத்திருக்கும் வடகொரியா!

## அதில் 47 அணுகுண்டுகளை தயாரிக்கலாம் என்கிறது தென்கொரியா



(பியாங்யாங்)

47 அணுகுண்டுகளை தயாரிக்க தேவையான 2 தொன் அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வட கொரியா வைத்துள்ளதாக தென்கொரியா எச்சரித்துள்ளது.

அணுசக்தி சர்வதேச முகமையின் கூற்றுப்படி, ஒரு அணு ஆயுதத்தை தயாரிக்க 42 கிலோகிராம் யுரேனியம் தேவைப்படும். அந்த வகையில், வட கொரியாவிடம் உள்ள 2,000 கிலோகிராம் யுரேனியம் மூலம் சுமார் 47 அணு குண்டுகளைத் தயாரிக்க முடியும்.

தற்போதுகூட வட கொரியாவின் யுரேனியம் செறிவூட்டும் ஆலைகள் நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன. ஏற்கனவே 50 அணுகுண்டுகளை வட கொரியாவைத்துள்ளதாக கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (நி)

# அனுமின் நிலையங்கள் அமைக்க ரஷ்யா-ஈரான் இடையே ஒப்பந்தம்

(மொஸ்கோ)

ஈரானில் நான்கு புதிய அனுமின் உற்பத்தி நிலையங்களை அமைக்க, 2.20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான அணுசக்தி ஒப்பந்தம் ரஷ்யா - ஈரான் இடையே கையெழுத்தானது.

மேற்காசிய நாடான ஈரான், அணுசக்தி தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் செய்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியது. இதைப் புதுப்பிப்பது தொடர்பாக தற்போது பேச்சு நடக்கிறது.

ஈரானில், அணுசக்திக்குத் தேவையான யுரேனியம் அதிகமாக உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் ஈரானின் புஷேரில் ஒரே ஒரு அணுமின் நிலையம் மட்டுமே உள்ளது. இது ரஷ்யாவால் கட்டமைக்கப்பட்டது. அணுசக்தி தொடர்பாக சர்ச்சை உள்ள நிலையில், ஈரானில் 2.20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 4 சிறிய அணுமின் உற்பத்தி நிலையங்களை அமைக்க, ரஷ்யா கடந்த வியாழக்கிழமை ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த ஆலைகள் வாயிலாக 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண இறுதிப்போட்டி

# இந்தியா-பாகிஸ்தான் பலப்பரீட்சை

## உச்ச எதிர்பார்ப்பில் ரசிகர்கள்

**ஆசியக் கிண்ண இறுதிப்போட்டி இன்று இரவு 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிலையில் முதன்முறையாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.**



17 ஆவது ஆசியக்கிண்ண கிரிக்கெட்டில் லீக் சுற்று முடிவில் 'ஏ' பிரிவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளும் 'பி' பிரிவில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளும் சூப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றிருந்தன.

அதன்படி 2 போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்ற இந்தியா முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இதையடுத்து கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியதன் மூலம் சூப்பர் 4 சுற்றில் இரண்டாவது வெற்றியைப் பெற்ற பாகிஸ்தான் 2 ஆவது அணியாக இறுதிப் போட் டிக்குள் நுழைந்தது.

ஏற்கனவே இந்தியா-பாகிஸ்தான் அணிகள் லீக் சுற்று மற்றும் சூப்பர் 4 சுற்றுகளில் மோதியிருந்தன. இவ் இரண்டு போட்டிகளிலும் இந் திய அணி 7 மற்றும் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இவ்விரு அணிகளும் ஆசியக் கிண்ண வரலாற்றில் முதல் முறையாக மோதவுள்ளதனால் இந்த உச்ச மோதலை இரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (3)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க போட்டி தொடர் நேற்று முன்தினம் கொழும்பு அபெக்கம பத்திரமுல வளாகத்தில் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தை சேர்ந்த செல்வி. மேகவர்சனா சுபாஸ்கரன் எனும் மாணவி சுகாதாரமும் மருத்துவமும் புத்தாக்கம் எனும் பிரிவில் தேசியரீதியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 | 200 | 200 |
| தக்காளி | 200 | 200 | 250 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 250 | 200 | 200 |
| கோவா | 180 | 200 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 200 | 350 | 230 | 300 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 | 50 |
| புடோல் | 120 | 150 | 100 | 100 | 250 |
| வாழைக்காய் | 120 | 100 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 100 | 250 | 200 | 170 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 300 | 150 | 180 | 250 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 | 170 | 200 |
| பீற்றூட் | 160 | 120 | 120 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 400 | 350 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 500 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 180 |
| கீரை – 1 பிடி | 120 | 60-140 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 170-230 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 800 | 1000 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 600 | 100 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 90 | 250 |

# இராசிபலன்

**28.09.2025**
**புரட்டாதி 12 , ஞாயிற்றுக்கிழமை**
**சஷ்டி முற்பகல் 11.49 மணிவரை**
**கேட்டை பின்னிரவு 2.11 மணிவரை**

**சுப நேரம் 9.02-10.32 மணிவரை**
**இராகுகாலம் 4.32-6.02 மணிவரை**
**சரஸ்வதி பூசை ஆரம்பம்**

**சந்திராஷ்டமம்**
**கார்த்திகை**

**வளவன்**

**மேஷம்**
வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பேசன சுகமுண்டு.

**மிதுனம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சீராகும்.

**கடகம்**
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்.

**சிம்மம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**
மனதில் புதிய சிந்தனை தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்**
பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**விருச்சிகம்**
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் கூடும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு**
பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மகரம்**
பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**
நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்**
எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**எங்கு தன்னம்பிக்கை இல்லையோ அங்கு சாதனைகள் இல்லை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான வழிமுறை மட்டுமே புலம்பெயர்வுக்கான

## வெளிநாட்டிற்கு செல்வதற்கே ரமேஷ் எப்போதும் விரும்பினான்.

இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய மீனவ கிராமத்தில் வளர்ந்த ரமேஷ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் பணத்தை சேமித்து வைத்திருப்பதையும், மோட்டார் சைக்கிள்களை வாங்குவதையும் சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதையும் அவர்கள் சொத்துக்களை வாங்குவதையும் பற்றிய கதைகளை அடிக்கடி வீடியோ வழியாக பார்த்திருப்பதுடன் அவ்வாறான கதைகளை கேட்டும் இருக்கின்றான். இது இவ்வாறிருக்க, அவனது சொந்தக் குடும்பம் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. அவனது தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்த பிறகு, குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ரமேஷின் தாய் தெருவோரத்தில் சிற்றுண்டிகளை விற்கத் தொடங்கினார்.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனாக இருந்த ரமேஷ் தனது குடும்பத்திற்கு ஒத்தாசை வழங்குவதற்காக சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக் கல்வியை தொடராமல் தனது கல்வியை முடித்துக் கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறினான். மணல் ஏற்றுதல், மீன்பிடி வலைகளை பழுதுபார்த்தல் போன்ற நாளாந்த சம்பளத்திற்கு வேலைகளைச் செய்யத் தொடங்கிய அவனுக்கு இதன் மூலம் ஒரு சிறிய வருமானம் மாத்திரமே கிடைத்தது. ஆயினும், இதைவிட பெரியதொரு வாழ்கையை அடைந்துகொள்வதைப் பற்றி கனவு காண்பதை மாத்திரம் அவன் நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டிற்கு சென்று சிறந்ததொரு வேலையைத் தேடிக்கொண்டு வீட்டிற்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது மனம் இரவு பகல் என பாராமல் போராடிக் கொண்டிருந்தது. தன்னைச் சுற்றியுள்ள ஏனைய இளைஞர்களைப் போலவே புலம்பெயர்வுதான் இந்நிலையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி என்று அவன் நம்பினான்.


ஒரு நாள், பாடசாலையில் தன்னுடன் படித்த ஒரு நண்பன் ஐரோப்பிய நாடு ஒன்றில் வேலைகளை ஏற்பாடு செய்து தரக்கூடிய ஒரு "நபரைப்" பற்றி அவனிடம் கூறினான். மொழித் திறனோ அல்லது பெருமளவு ஆவணங்களை நிரப்புவதோ தேவையில்லை என்றும் முன்கூட்டியே பணம் செலுத்தினால் மட்டும் போதுமானது என்றும் கூறினான். அந்த வேலையின் ஊடாக மாத்திற்கு ரூபாய் 400,000 இற்கும் மேல் உழைக்கலாம் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டது. கிடைக்கப் போகும் சலுகையால் மயங்கி எந்தவொரு ஆபத்துகளையும் பற்றி ஒரு கணமேனும் சிந்தியாமல் ரமேஷ் அந்த தொழில் முகவரைச் சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே தன்னிடம் இருந்த அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தார். அவனது தாயார் இந்த விடயத்தில் சற்று தயக்கம் காட்டினார். ஆனாலும் ரமேஷ் அவரை சமாதானப்படுத்தினான். "இது எனக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு," என்று கூறினான். "நான் சில ஆண்டுகளில் திரும்பி வருவேன், நிலைமை மாறும்." தொழில் முகவர் என்று அழைக்கப்படுபவருக்கு பணம் செலுத்துவதற்காக ரமேஷ் தங்கள் குடும்ப வீட்டை அடமானம் வைத்து ரூபாய் 2 மில்லியன் கடன் வாங்கினான்.

அதனையடுத்து பெயர் கூட தெரியாத ஒரு இடைமாறல் நாட்டிற்கு ரமேஷ் அழைத்துச் செல்லப்பட்டான். ஆனால் அவன் தரையிறங்கிய தருணத்திலிருந்து, விடயங்கள் தடம் மாறி தவறான முறையில் நகர ஆரம்பித்தது. ரமேஷ் விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஒரு நெரிசலான தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் அங்கு ஏராளமான பிற இலங்கையர்கள் மற்றும் தெற்காசியர்கள் வைக்கப்பட்டிருந்தனர். தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக என்று கூறி அவரது கடவுச்சீட்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் திருப்பித் தரப்படவில்லை. ஒரு கட்டுமான தளத்தில், சம்பளமோ அல்லது ஓய்வு நாட்களோ இல்லாமல், மிக மோசமான சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. அவனது ஒப்பந்தம் பற்றியோ அல்லது லீவு பற்றியோ கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல்களையும் கூச்சலிடுதலையும் சந்திக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது. ரமேஷுக்கு ஆங்கிலமோ அல்லது அவர் இருந்த இடத்தின் உள்ர் மொழியோ பேசத் தெரியவில்லை என்பதுடன் தொலைபேசி வசதியும் இருக்கவில்லை. தொழில் முகவர் தன்னை ஏற்கனவே இணங்கிக்கொண்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வார் எனும் எண்ணம் மட்டுமே அவனிடம் இருந்தது. நாட்கள் வாரங்களாக மாறின. ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. தான் ஏமாற்றப்பட்டுள்ளதையும் தனது முகவர் போலியானவர் என்றும் ஒரு ஆட்கடத்தல்காரர் என்பதையும் ரமேஷ் உணரத் தொடங்கினான்.



பின்னர் அந்த ஆட்கடத்தல்காரர் மீண்டும் அவர்களிடம் வந்து ஐரோப்பாவிற்கான பயணம் படகு வழியாக தொடரும் என்று தெரிவித்தார். "இப்போது மக்கள் இப்படித்தான் சென்றடைகின்றார்கள்," என்று கூறினார். "நீங்கள் படகு பயணத்தை எப்படியாவது சமாளித்துக் கொள்ளத் தான் வேண்டும்" என்ற கூறியதும் ரமேஷ் பயந்தான், ஆனால் வேறெந்த வழியும் இருக்கவில்லை என்ற நிலையில், இனிமேல் இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்று நினைத்து அதனை ஒப்புக்கொண்டான்.

இருள் சூழ்ந்த அந்த இரவில் அவனும் மற்றும் பலரும் தூரப் பிரதேசத்தில் இருந்த ஒரு கடற்கரையில் இருந்து ஒரு பழைய மீன்பிடி இழுவைப் படகில் ஏற்றப்பட்டனர். இழுவைப் படகு சன நெரிசல் மிக்கதாக இருந்ததுடன் பாதுகாப்பு உபகரணங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சில பைகளில் இருந்த பிஸ்கட்டுகளைத் தவிர வேறு எந்த உணவும் இருக்கவில்லை என்பதுடன் போதுமான அளவு தண்ணீர் கூட இருக்கவில்லை. அவர்கள் ஆழ் கடலில் பயணிக்க தொடங்கியவுடன் நிலைமை மோசமாக மாறியது. கடல் கொந்தளிப்பாக இருந்ததுடன் கடல் பயணத்தால் பலருக்கு குமட்டல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கின. பகலில் வெயில் அவர்களை சுட்டெரித்தது. இரவில், குளிர் காற்று அவர்களின் மெல்லிய ஆடைகளைத் துளைத்து உள்ளே நுழைந்தது. ஒரு நாள் இரவில் ஓர் இளைஞன் படகில் இருந்து தவறி விழுந் ததுடன் அவனைக் கடைசிவரை கண்டுபிடிக்கவே முடியவில்லை.



ஐந்தாவது நாளில், தண்ணீர் படகுக்குள் கசிய ஆரம்பித்தது. அச்சம் அவர்களை வேகமாகக் கௌவிக்கொண்டது. எல்லா நம்பிக்கையும் இழந்துவிட்டதாக அவர்கள் நினைத்தபோது அவர்களைக் கடந்து சென்ற ஒரு சரக்குக் கப்பல் அவர்களைக் கண்டு அவர்களை மீட்டு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்த புலம்பெயர்ந்தோரை அருகிலுள்ள நாட்டிடம் ஒப்படைத்தது. தனது உயிரைத் தக்க வைத்துக் கொள்வதை தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட இறுதியில் ரமேஷ் அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டான். ஆட்கடத்தல்காரனை நம்பி தனது பணத்தையும் கனவையும் ரமேஷ் இழந்தான். ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற குறுக்குவழி தவறு என்பதை அவன் உணர்ந்தான். பயணம் அவனுக்கு நிறைய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைய குறுக்குவழிகள் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். எந்த வெளிநாட்டிலும் வேலைக்கு தகுதியும் அனுபவமும் தேவை. எந்த தகுதியும் அனுபவமும் இல்லாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக வழங்கப்படுகின்ற வாக்குறுதி என்பது, நீங்கள் ஆபத்தில் நுழைய முயற்சிக்கிறீர்கள் என்பதற்கான எச்சரிக்கையைத் தவிர வேறொன்றும் அல்ல.

இப்போது தனது கிராமத்தில், ரமேஷ் தனது பயணத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறான். ஒழுங்கற்ற புலம்பெயர்வின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர் குழுக்கள் மற்றும் உள்;ர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அவன் இணைந்து பணியாற்றுகிறான். வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்தையும் நம்ப வேண்டாம் என்று அவன் மற்றவர்களை வலியுறுத்துகிறான். "உங்களுக்கு ஆவணங்கள் தேவையில்லை என்று யாராவது சொன்னால், அல்லது இவை அனைத்தும் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அது உங்களுக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதற்கான எச்சரிக்கை அறிகுறி" என்று அவன் இளைஞர்களிடம் கூறுகிறான். "அவர்கள் உங்களிடம் பொய் சொல்கிறார்கள்". இப்போது பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரையும் ஆட்கடத்தல்காரரையும் எவ்வாறு வேறுபடுத்துவது என்பதை அவன் கற்பிக்கின்றான்.

ரமேஷின் கதை ஒரு உண்மையான சம்பவமே. சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை மறைக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் இதேபோன்ற பயணங்களை மேற்கொண்ட பல இலங்கை இளைஞர்களின் உண்மையான மற்றும் பேரழிவைக் கொண்டு வரும் அனுபவங்களை பிரதிபலிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், ஒழுங்கற்ற புலம்பெயர்வு வலையமைப்பில் சிக்கிய பின்னர் 1,700 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மலேசியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். மார்ச் 2025 இல், ஒவ்வொருவரும் 4.5 மில்லியன் ரூபாய் வரை செலுத்தி பெற்ற போலி விசாக்களுடன் ஒன்பது இலங்கையர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். டிசம்பர் 2023 இல், 14 இலங்கையர்கள் ஒழுங்கற்ற முறையில் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கதைகள் அதிகரித்து வரும் ஒரு நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. அதிக ஊதியம் தரும் வேலைகளையும், விரைவாக விசாக்களையும் பெற்றுத் தருவதாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைவதற்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்கடத்தல்காரரர்கள் இளைஞர்களின் நம்பிக்கைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிலிருக்கும் ஆபத்துகளையும் சுரண்டலையும் மற்றும் சட்டரீதியான விளைவுகளையும் அரிதாகவே குறிப்பிடுவார்கள். ஆட்கடத்தல்காரரின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான். மேலும் ஒழுங்கற்ற புலம்பெயர்ந்தோருக்கு உதவ அவர்களுக்கு எந்த பிணைப்பும் கடப்பாடும் இல்லை. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்கடத்தல் என்பது ஒரு சர்வதேசக் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆட்கடத்தலைக் குற்றமாக பிரகடனப்படுத்தும் சர்வதேச மற்றும் நாடுகளுக்குரிய சட்டங்கள் உள்ளன.

வாக்குறுதிகளால் சிக்கிக்கொள்வது என்றால் என்ன என்பதை ரமேஷ் இப்போது அறிவான். உண்மையான வாய்ப்பு குறுக்குவழிகள் அல்லது இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் வராது என்பதை அவன் மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறான். புலம்பெயர்வு நம்பிக்கையை அளிக்கும் - ஆனால் பாதுகாப்பான, சட்டபூர்வமான மற்றும் ஒழுங்கான வழிகள் மூலம் அவை மேற்கொள்ளப்படும் போது மாத்திரமே அது அவ்வாறு அமையும். உதவி, விழிப்புணர்வு மற்றும் சரியான வழிகாட்டுதலுடன், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தையும் - அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆர்வமுள்ள புலம்பெயர்ந்தோர் தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும், போலி தொழில் முகவர்களாக மாறுவேடமிட்டுக் கொண்டுள்ள ஆட்கடத்தல்காரர்களை நம்பியிருக்கக்கூடாது என்றும் அவன் இப்போது வலியுறுத்துகிறான்.

**பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காக இலங்கையில் உள்ள புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) 077 441 0086 என்ற இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.**

இந்த தகவல் பெட்டிகள் கட்டுரையில் சேர்க்கப்படும் - இந்த கட்டமைக்கப்பட்ட உரை கட்டுரையின் உள்ளே உள்ளடக்கப்படும் என்பதுடன் அது மேலே உள்ள உண்மையான கதையின் தொடர்ச்சியாக இடம்பெறாது)

### நீங்கள் புறப்படுவதற்கு முன்:

வெற்றிகரமான மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு பயணத்தை உறுதிசெய்ய, வருங்காலத்தில் புலம்பெயர்ந்தோர் அத்தியாவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

- **வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளின் சட்டப்பூர்வ நிலையைச் சரிபார்க்கவும்:** எந்தவொரு கட்டணத்தையும் செலுத்துவதற்கு அல்லது புறப்படுவதற்கு முன் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சட்டப்பூர்வ பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அரசாங்க தகவல் வழிமூலங்கள் மூலம் வேலை வாய்ப்புகளைச் சரிபார்க்கவும்.
- **சட்டபூர்வமான வழிகளைப் பயன்படுத்தவும்:** பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள், உத்தியோகபூர்வ தூதரக வழிமூலங்கள் அல்லது சரிபார்க்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் விசாக்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- **இடைத்தரகர்கள் மற்றும் உரிமம் பெறாத முகவர்களைத் தவிர்க்கவும்:** புலம்பெயர்வு முகவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலியாவதைத் தவிர்க்க பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் நேரடியாகக் கையாளவும்.
- **ஆராய்ச்சி சார்ந்த இலக்கு நாடுகள்:** நீங்கள் செல்லத் திட்டமிடும் நாட்டின் சட்டங்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, புறப்படுவதற்கு முன் உங்கள் தொழில்தருநர் பற்றிய தகவல்களைச் சரிபார்க்கவும்.

### பயணத்தைத் தொடங்குவதற்கு முனனர் தேவைப்படும் அத்தியாவசிய ஆவணங்கள்:

பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் புலம்பெயர்வதற்கு, தனிநபர்கள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்களைத் தயாரித்து பாதுகாக்க வேண்டும்:

- **செல்லுபடியாகும் கடவுச்சீட்டு:** சர்வதேச பயணத்திற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டினை கொண்டிருக்க வேண்டும்.
- **விசா:** தேவையைப் பொறுத்து, புலம்பெயர்வோர் சரியான மற்றும் செல்லுபடியாகும் விசா வகையைக் (வேலை, படிப்பு, சுற்றுலா போன்றவை) கொண்டிருத்தல் வேண்டும்.
- **தொழில் அனுமதிப்பத்திரங்கள்:** வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்தால், உத்தியோகபூர்வ தொழில் அனுமதிப்பத்திரம் அவசியானதாகும்.
- **தொழில் ஒப்பந்தங்கள்:** தொழில்தருநரால் வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட ஒப்பந்தம் உங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும். வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வது குறித்து முடிவு செய்ய ஒப்பந்த நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.
- **மருத்துவ அறிக்கை மற்றும் தடுப்பூசி பதிவுகள்:** சில நாடுகளில் தொழில் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார நிலையை அல்லது தொழில் புரிதல் சார்ந்த மருத்துவ தகுதியை உறுதிப்படுத்துக் கொள்வதற்கான சான்றிதழ்களையும் தடுப்பூசிகளுக்கான சான்றுகளையும் அவசியாமாக்கியுள்ளன.
- **நிதி நிலைத்தன்மைக்கான சான்று:** சுற்றுலாப் பயணியாகவோ அல்லது கல்விக்காகவோ பயணம் செய்தால் நிதித் திறனை நிரூபிக்க வங்கி அறிக்கைகள் அல்லது அனுசரணையாளர்களின் கடிதங்கள் தேவைப்படலாம்.
- **அவசர தொடர்புகள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள்:** டிஜிட்டல் பிரதிகளை உங்கள் வசம் வைத்திருங்கள். அத்துடன் உங்கள் பயண ஆவணங்களின் டிஜிட்டல் அல்லது அச்சுப் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். பாதுகாப்பிற்காக அவசர தொடர்பு எண்களை எடுத்துச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும்

## ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?

ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்பது புலம்பெயர்வோரின் பிறப்பிடம், இடைமாறல் இடம் அல்லது சேருமிடம் சார்ந்ததாக உள்நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு ஏதுவான சட்டங்கள், விதிமுறைகள் அல்லது சர்வதேச ஒப்பந்தங்களுக்கு புறம்பாக நிகழும் ஆட்களின் நடமாட்டத்தைக் குறிக்கிறது. சிலர் புலம்பெயர்வதற்குத் தேவையான தகுதிகள் இல்லாததால் அல்லது சட்ட செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அல்லது ஆட்கடத்தல்காரர்களினால் பரப்பப்படும் தவறான தகவல்கள் காரணமாக ஒழுங்கற்ற புலம்பெயர்வுக்கு முயல்கின்றனர். மேலே விவரிக்கப்பட்ட ரமேஷ்ன் கதை ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வு பயணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் ஒழுங்கற்ற புலம்பெயர்வு சம்பவங்கள் அதிகரித்ததுடன் இது ஒழுங்கற்ற வழிகளில் புலம்பெயர முயற்சிக்கும் தனிநபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்கை எடுத்துக்காட்டுகின்றது. இது பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் மற்றும் சட்ட விளைவுகளை எதிர்நோக்க காரணமாக அமைந்துவிடுகின்றது.

கடல் மார்க்கமாக தமது நாடடு மக்கள் ஒழுங்கற்ற முறையில் புலம்பெயர முயன்ற பல சம்பவங்களை இலங்கை அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். மே 2023 இல், இந்திய சமுத்திரத்தின் ஊடாக அவுஸ்திரேலிய எல்லையை அடைய முயற்சி செய்த 41 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய எல்லைப் படையால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எம் நாட்டின் ஊடகங்களில் இதேபோன்ற எண்ணற்ற சம்பவங்கள் அவ்வப்போது தொடர்ந்து தெரிவிக்கப்படுகின்றன. இந்த சம்பவங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வுடன் தொடர்புடைய அபாயங்களை எடுத்துக்காட்டுவதுடன் இதில் சுரண்டல், தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தலுக்கான சாத்தியக்கூறுகள் போன்றவையும் அடங்கும். இதனை வேறு விதமாக கூறுவதானால், புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறைகள் பற்றியும் அவர்களின் பயணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான புலம்பெயர்வு வழிமுறையினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் இவற்றை மறந்து தங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி மாத்திரமே பயணிக்கிறார்கள் என்பதையுமே இது எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான சில முக்கியமான தகவல்களைப் புரிந்துகொள்ள கீழே உள்ள தலைப்புகள் உங்களுக்கு உதவும். புலம்பெயர்வு தொடர்பான குற்றங்கள் உள்ளதுடன் இதில் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோர் குற்றவாளிகளுக்கு பலியாகின்றனர். அறியாமை காரணமாக புலம்பெயர்ந்தோர் பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன் அவர்களின் தமது சொந்த நாட்டின் மற்றும் அவர்கள் நுழைய முயற்சிக்கும் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியதற்கான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

## ஆட்கடத்தல் என்றால் என்ன?




- ஆட்கடத்தல் என்பது தேச எல்லைகளை ஒழுங்கற்ற முறையில் க்டக்க ஆட்கடத்தல்காரர்களின் சேவைகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு பணம் செலுத்துவதை உள்ளடக்கியதாகும். இது ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராக செய்யப்படும் ஒரு சர்வதேசக் குற்றமாகும். புலம்பெயர்வோர் ஆட்கடத்தல்காரருக்கு பணம் செலுத்துவதன் மூலம் தானாக முன்வந்து தங்களைக் கடத்துவதற்கு ஒத்துழைக்கின்றனர். செல்லுபடியாகும் விசா இல்லாமல் சர்வதேச எல்லைகளைக் கடக்கும் பொருட்டு ஆட்கடத்தல்காரர்களின் உதவியைப் பெறுவதற்கு அவர்களை அணுகும் போதே தாங்கள் சட்ட விரோதமான முறையில் கடத்தப்படுவதற்கு ஆட்கடத்தல்காரரை அணுகுகின்றோம் என்று புலம்பெயர்வோருக்குத் தெரியும். சில நேரங்களில் கடத்தல் முயற்சியை வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்வதற்கு போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது நாடுகளின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றமாகும்.

மேற்படி கலந்துரையாடப்பட்ட ரமேஷின் சம்பவத்தைப் பொருத்தமட்டில், ஐரோப்பாவிற்குள் நுழைய தனது குடும்பத்தின் வீட்டை அடமானம் வைத்து ஆட்கடத்தல்காரருக்கு பணம் கொடுத்தபோது அவர் தனது பயணத்தைப் பற்றி அறிந்திருந்தார். அவர் தானாக முன்வந்து ஆட்கடத்தல்காரரின் சேவைகளை நாடினார். பெரும்பாலும், புலம்பெயர்வோர் சிறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் குடியுரிமை வாக்குறுதிகளால் ஆட்கடத்தல்காரர்களால் ஈர்க்கப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட ஆட்கடத்தல்காரரின் உதவியைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகளை அடைந்தவர்கள் பற்றிய உண்மைக்கு மாறான வெற்றிக் கதைகளையும் அவர்கள் கிராமங்களில் கேள்விப்படுகின்றார்கள்.

## புலம்பெயர்வின் வசீகரம்: சிறந்த வாழ்க்கையைத் தேடுதல்

உலகமயமாக்கல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் வாய்ப்புகள் காரணமாக, குறிப்பாக இளைஞர்கள் வெளிநாடுகளில் கல்வி, தொழில் மற்றும் வாழ்க்கை முறை வாய்ப்புகளை ஆராய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும், புலம்பெயர வேண்டிய அவசரமானது சில சந்தர்ப்பங்களில் அவசரமான மற்றும் தகவல் அறியாத முடிவுகளுக்கு வழிவகுப்பதுடன் இந்த நிலையை அறிந்துகொள்ளும் ஆட்கடத்தல்காரர்கள் எளிதான பயணம், அதிக ஊதியம் தரும் வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சட்டப்பூர்வ அந்தஸ்து போன்ற பொய்யான வாக்குறுதிகளை புலம்பெயர்வதற்கு ஆர்வமாக இருப்பவர்களுக்கு வழங்குவதன் மூலம் நிலைமையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய ஏமாற்று வழிமுறையாக முன்வைக்கப்படும் கவர்ச்சிகரமான விடயங்கள் பெரும்பாலும் சுரண்டல், கட்டாய உழைப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் அல்லது செல்ல வேண்டிய நாட்டின் குடிவரவு சட்டங்களை மீறியதற்கான சிறைத்தண்டனை போன்றவற்றிற்கும் கூட வழிவகுக்கும்.

## எதிர்காலத்தில் புலம்பெயர்வதற்கு விரும்புவோருக்கான ஆலோசனை

- நீங்கள் ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வோராக மாறுவதற்கு வாய்ப்புள்ளது:
- போலி ஆவணங்களுடன் அல்லது செல்லுபடியாகும் விசா இல்லாமல் ஒரு நாட்டிற்குள் ஒழுங்கற்ற முறையில் நுழைகிறீர்கள்.
- நீங்கள் ஒரு வருகை விசா மூலம் ஒரு நாட்டிற்குள் நுழைந்து, தொழில் விசா இல்லாமல் சேருமிட நாட்டில் தொழிலில் ஈடுபடுகிறீர்கள்.
- விசா காலாவதியான பிறகு சென்றடையும் நாட்டில் நீங்கள் அதிக காலம் தங்குகிறீர்கள்.
- உங்கள் நுழைவுக்கு அனுமதிக்கப்பட்டதைத் தவிர வேறு விடயங்களில் ஈடுபடுகின்றீர்கள். உதாரணம்: மாணவர் விசாவுடன் நுழைந்து வேலையில் ஈடுபடுகிறீர்கள்.

## நீங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறையில் செல்லும்போது என்ன நடக்கும்?

ஒழுங்கற்ற புலம்பெயர்வைத் தேர்ந்தெடுப்பது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் இதில் பின்வருவன அடங்கும்:

- உயிருக்கு ஆபத்தான பயணங்கள்.
- ஆட்கடத்தல்காரர்களால் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுதல்.
- நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுதல் மற்றும் சேருமிட நாட்டின் குடிவரவுச் சட்டங்களை மீறியதற்காக சிறைத்தண்டனை போன்ற சட்ட ரீதியான பாதக விளைவுகள்.
- பணத்தை இழந்துவிடுதல்.
- குடும்பத் தொடர்பினை இழந்துவிடுதல் / தனிமைப்படுதல் மற்றும் மிக மோசமான சூழ்நிலைகளில் உயிர் இழப்பு.
- ஆட்கடத்தல்காரர்கள் பயணத்தின் இடை நடுவில் உங்களைக் கைவிடலாம்.
- பயண ஆவணங்களை பறிமுதல் செய்தல் மற்றும் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்.
- சொந்த நாட்டில் விட்டுச் சென்ற குடும்பம், கடன் சுமையின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். சில சமயங்களில் கடனை சரியான நேரத்தில் செலுத்தாவிட்டால், கடன் கொடுத்தவர்கள் குடும்பத்திற்கு பிரச்சனையை உருவாக்கலாம்.
- புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற பயணத்தைத் தொடங்கிய பின்னர் ஆட்கடத்தல்காரர்கள் அவ்வப்போது பணத்தை உங்களிமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்கள் புலம்பெயர்ந்தவரை வலுக்கட்டாயமாகவோ அல்லது அச்சுறுத்தல் விடுத்தோ பணம் கொடுக்குமாறு கோருகிறார்கள்.



## நினைவில் கொள்ள வேண்டிய சில விரைவான குறிப்புகள்:

### புறப்படுவதற்கு முன்னர்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடும் போது, ஆட்சேர்ப்பு நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமானதாகும். இது பொறுப்புக்கூறலையும் ஒழுங்குறுத்தல் தரநிலைகளைப் பின்பற்றுவதையும் உறுதி செய்கிறது. விரைவாக விசாக்களை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கின்ற மற்றும் இலங்கை சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமான போலி ஆவணங்களைத் தயாரித்துத் தருவதாகவும் கூறுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாகத் தோன்றும் ஆட்கடத்தல்காரர்களை நம்புவதைத் தவிர்க்க வேண்டும். மோசடி நடைமுறைகளுக்கு எதிராக் உங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நிறுவனம் அல்லது விசா செயலாக்க முகவரால் உறுதியளிக்கப்பட்ட விசாவின் செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எப்போதும் சம்பந்தப்பட்ட தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளவும். விசா செயன்முறை அல்லது குறிப்பிட்ட விசா வகைகள் குறித்து இந்த நிறுவனங்களுடன் சரிபார்ப்பது உங்களுக்கு தெளிவை வழங்குவதுடன் உங்கள் நலன்களைப் பாதுகாக்க உதவும். இது பாதுகாப்பான புலம்பெயர்வு வழிமுறையில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு உதவும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலுக்காக உங்கள் பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு உத்தியோகத்தரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

### புறப்படுதல்:

- உங்கள் கடவுச்சீட்டு, விசா/தொழில் அனுமதிப்பத்திரம், விமான பயணச் சீட்டு மற்றும் தொழில் ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்து மூல ஆவணங்களையும் எடுத்துச் செல்லுங்கள்.
- உங்கள் புலம்பெயர்வு/வேலைவாய்ப்பு தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட பதிப்புகளை டிஜிட்டல் முறையில் எடுத்துச் செல்லுங்கள். இந்த ஆவணங்களின் வரிசையில் தொழில் ஒப்பந்தம், கடவுச்சீட்டு, தொழில் சார்ந்த வரையறைகள், விசா, தொழில் வழங்குனரின் விவரங்கள், இலங்கை வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் விவரங்கள் போன்றவை இருக்கலாம்.
- அவசர தொடர்பு இலக்கங்களை கொண்டு செல்லுங்கள். அவற்றில் சேரும் நாட்டில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் உள்ள உறவினர் அல்லது நண்பர் மற்றும் சேரும் நாட்டில் வசிப்பவர் ஆகியோரின் தொடர்பு இலக்கங்கள் போன்றவை அடங்கலாம்.
- உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலிலும் மற்றும் தொழில் இடத்திலும் மட்டுமே வேலை செய்யுங்கள். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவரை மாற்றுவது உங்களை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்பதுடன் அது உங்கள் உழைப்பைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும். சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவர்களை மாற்றாமல் கவனமாக இருங்கள்.
- உங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள்.



## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவுசெய்து கொள்ளுதல்.

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயரும் இலங்கையர்கள் SLBFE இல் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகப் புறப்படும்போது SLBFE இல் பதிவு செய்வது விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம் எனும் ஒரு விருப்பத்தேர்வு அல்ல. இலங்கை சட்டத்தின்படி அது கட்டாயமாகும். SLBFE இல் பதிவு செய்யும் செயன்முறையை மீறி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்ல யாராவது உங்களை ஊக்குவித்தால், அது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தயாராக வேண்டும் என்று உங்களுக்கு கூறும் எச்சரிக்கையாகக் கருதப்படலாம். வருகை விசாவில் சென்று வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு SLBFE இல் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வருகை விசாவில் புறப்படுவதற்கு முன்பு SLBFE பணியகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் இந்த விவரங்களைப் பெறலாம்.

பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதறகாக, 077 441 0086 என்ற இலகத்தின் வாயிலாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) தொடர்பு கொள்ளவும்.

IOM
UN MIGRATION

(C-293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயின்...

கூட்டத்தில் கூட்ட நெரிசலால் 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

விஜய், கரூரில் நேற்றிரவு மக்களைச் சந்தித்து தேர்தல் பிரசாரம் மேற்கண்டபோது தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் திரண்டதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

கூட்டநெரிசலில் சிக்கி 16 பெண்கள், 6 குழந்தைகள் உட்பட 38 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-7)

## ரயில்...

கிப் பயணித்த புகையிரதம் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் சிராவஸ்திபுர தொடருந்து நிலையத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 57 வயதுடைய கண்டிப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## தமிழினப்...

இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்து தமிழின அழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு சுழற்சி முறையில் நடைபெற்று வருகிறது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள், இளைஞர்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச்சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமானது எதிர்வரும் முதலாம் திகதி வரை மாவட்ட ரீதியில் தொடர்ந்து இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## அருட்தந்தையர்...

பாரிய வாகனங்களில் கொண்டு வரப்பட்டன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் முதல் கட்டமாக அமைதியான முறையில் காற்றாலை உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த வாகனங்களை மக்கள் தடுத்து நிறுத்த முற்பட்ட போதிலும் மக்களின் எதிர்ப்பை மீறி காற்றாலை உதிரிப்பாகங்கள் கொண்டு செல்லப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இரண்டாவது காற்றாலை உதிரிப்பாகங்கள் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் வீதிகளில் இறங்கி தடுக்க முற்பட்ட நிலையில் பொலிஸார் கொடூரமாக பெண்கள், அருட்தந்தையர்கள் என அனைவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டு கூட்டத்தைக் கலைக்க முற்பட்டனர். அதே நேரம் போராட்டக்காரர்களைத் தடுப்பதற்காக விசேட அதிரடிப் படையினரையும் பயன்படுத்தி ஆயுத முனையில் போராட்டக்காரர்களை அச்சுறுத்தி, தாக்கி காற்றாலை உதிரிப்பாகங்களைக் கொண்டு சென்றனர்.

குறிப்பாக சில பெண்கள் மீது கால்களால் மிதித்தும் தடிகளால் அடித்தும் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 15 பேரைக் கைது செய்வதற்கான அனுமதியை நீதவானிடம் பொலிஸார் பெற்றனர். அவர்களில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மூவரைப் பொலிஸார் கைது செய்த நிலையில், அவர்கள் மூவரையும் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட நீதவான், மூவருக்கும் பிணை வழங்கினார். ஏனைய 12 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு மன்னார் நீதவான் உத்தரவிட்டார். (ம-7,285)

## மக்களின்...

மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஒன்றில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை என்பது அபிவிருத்தி தான் முதலில், பின்னர்தான் மக்கள் என்ற வகையில் உள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் என்பது ஏமாற்றத்தைத் தரும் வகையிலே உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகம் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதாலேயே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ம-7)

## சர்வ...

வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வு கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் இலங்கை தொடர்பான விவகாரம் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான தூதுக்குழு கலந்து கொண்டது.

அங்கு உரையாற்றிய நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார,

மனிதப் புதைகுழிகள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நீதித்துறையின் மேற்பார்வையின் கீழ், சட்டத்தரங்களின்படி நடைபெறுகின்றன.

சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் குடும்பங்கள் மற்றும் தகுதி வாய்ந்த நிபுணர்களைச் செயல்முறையில் சேர்ப்பதற்கும் அரசு செயற்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## போதைப்...

தப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கும் போதைப்பொருட்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. போதை வஸ்துக்களின் படிப்படியான பரவல் காரணமாக நாட்டின் பிள்ளைகள் அதற்குப் பலியாகியுள்ளனர்.

ஒரு நல்ல மற்றும் அறிவார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்பச் சிறந்த மனித வளம் இருக்க வேண்டும். இந்த போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிர்கால சந்ததியினரை இரையாக்கச் செய்வதன் மூலம் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 5965
Q 4 7 4 3 1 8
அத சம்பத
Q 4 3 1 8
சீட்டிழுப்பு இலக்கம் 540
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.27
0881
மேடம் 16 22 25 39

தன நிதானய
திகதி - 2025.09.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1995
I 12 34 49 50 I
Double Chance

மெகா பவர்
திகதி 27/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2313
N 25 03 11 30 52

ஜய ஜய
திகதி 2025.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 0233
M 3 0 2 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4207
சீட்டிழுப்பு திகதி 27.09.2025
J 21 33 72 73
J
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 1274
விருச்சிகம் 06 12 14 38 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.09.2025 வெற்றி வாரம் 0673
F 4 8 1 1 6 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,176,029.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2939
சீட்டிழுப்பு திகதி 2025.09.27 தினம் சனிக்கிழமை
11 33 37 57 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,970,750.40

சனிதா
திகதி 27.09.2025 வெற்றி வாரம் 5100
11 28 51 71 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,649,513.20
ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
வெற்றி வாரம் 0779
27.09.2025 சனிக்கிழமை
14 17 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4651
சீட்டிழுப்பு திகதி 27.09.2025 தினம் சனிக்கிழமை
08 38 49 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,093,832.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 38 13 23 63 67
2115
27.09.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.596,600,914.60

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2765
சீட்டிழுப்பு திகதி: 2025.09.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,221,027.20
20 31 51 75 I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத விடயங்கள் குறித்து கனவு காண்பவர்களே அவற்றை வெற்றி கொள்ள முடியும்.

– *அப்துல் கலாம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சாரத்தியப் பயிற்சி நிறுவனங்களின் தரநிர்ணயம் எப்படி உள்ளது

**உருவாக்குதல்** என்ற விடயம் மிகவும் முக்கியமானது. பொதுவில் எந்தத் துறையை எடுத்தாலும் அந்தத் துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்க வேண்டும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கருத்தில் கொள்வது அவசியம்.

அதாவது ஒரு காலத்தில் தலைவர்கள் பிறக்கிறார்கள் எனக் கருதப்பட்டது. ஆனால் முகாமைத்துவ சிந்தனை வளர்ச்சியடைந்தபோது தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்ற உண்மை உணரப்பட்டது.

இதுபோன்றே அனைத்து நிபுணத்துவர்களும் தொழிற்துறை சார்ந்தவர்களும் உருவாக்கப்படுகின்றனர்.

ஆம் உருவாக்கம் என்பதற்குள் கல்வி, பயிற்சி, செயன்முறைப் பயிற்சி, செயற்பாடு என்பன முக்கியம் பெறுகின்றன.

இதற்கு நல்ல உதாரணம் சாரதிகளின் உருவாக்கமாகும். சாரத்தியம் என்பது மனித உயிர்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டது.

ஒரு சாரதி சாரத்திய விதிமுறையில் இருந்து விலகுவாராயின், அதன் விளைவு மனித உயிரிழப்பாக இருக்கும்.

எனவேதான் சாரத்தியப் பயிற்சி என்பது முழுமையாக இருக்க வேண்டும். அதாவது வீதி விதிமுறைகளைக் கற்றுத் தெளிதல், குறியீடுகள் தொடர்பில் பூரண அறிவைப் பெறுதல், வாகனத்தைச் செலுத்துவதற்கு முன்னதான தயார்படுத்தல்கள், வாகனத்தைச் செலுத்தும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் என ஒவ்வொன்றையும் வாகன சாரதிகள் அறிந்தும் தெரிந்தும் வைத்திருப்பது கட்டாயமானது.

சுருங்கக்கூறின் சாரத்தியப் பயிற்சிக்கு வருகின்றவர்கள் சாரத்தியம் தொடர்பில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் உன்னதமான நிலையைப் பெற்றிருக்க வேண்டும்.

இதை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி அறிவூட்டல், பயிற்சி, செயலூக்கம் என்பனவாகும்.

இதனை வழங்க வேண்டிய பொறுப்பு சாரத்தியப் பயிற்சி நிறுவனங்களினுடையதாகும்.

எனினும் எங்கள் தமிழர் பகுதியில் இருக்கக்கூடிய சாரத்தியப் பயிற்சி நிலையங்களின் தரநிர்ணயம் எவ்வாறாக உள்ளது. அது தொடர்பில் மேற்பார்வைகள் ஏதும் உண்டா? என்பன பற்றியெல்லாம் ஆராய்ந்தால்,

எங்கள் மண்ணில் வீதி விபத்தில் நாளாந்தம் நடக்கின்ற மரணங்களுக்கும் மரணித்தவர்களின் வீடுகளில் ஒலிக்கின்ற மரண ஓலங்களுக்கும் மூலகாரணம் போதிய சாரத்தியப் பயிற்சி இல்லாமல் சாரத்திய அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதாகும் என்ற உண்மை கண்டறியப்படும்.

ஆம், வாகனத்தைச் செலுத்திக் கொண்டு கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவது, எந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல் தாம் நினைத்தபாட்டில் வாகனங்களைத் திருப்புவது, திடீரென நிறுத்துவது, வாகனங்களை முந்திச் செல்வது என அத்தனை கொடுமைகளும் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன எனில் பயிற்சியால் கிடைத்த அறிவு, அதனால் ஏற்பட்ட திறன், அதிலிருந்து கிடைக்கக்கூடிய மனப்பாங்கு என அனைத்தும் வெறுமை என்பது உணரப்படும்.

# சட்ட விரோதமாக கொள்கலன்கள் விடுவிப்பு துரித விசாரணைகளை முன்னெடுங்கள்

## அரசுக்கு சஜித் அழுத்தம்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வது போலவே 323 கொள்கலன்கள் சட்ட விரோதமாக விடுவிக்கப் பட்டமையுடன் தொடர்புடையவர்களும் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட வேண்டும். முழு நாடும் இந்தக் கேள்விக்கான பதிலுக்காகவே காத்திருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மொரட்டுமுல்ல இதிபெத்த பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் உரையாற்றிய அவர்,

பொய்யான, மக்களை ஏமாற்றும் அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பொய்கள் மற்றும் குழப்பங்களால் மக்களை ஏமாற்றுகின்றனர். 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாகப் பொய், ஏமாற்றுதல் மற்றும் குழப்பத்தை மட்டுமே அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

தற்போது போதைப் பொருட்கள் பெருந் தொகையாகக் கைப்பற்றப்படுவது குறித்து பாரிய பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போதைப்பொருள் கடத்தல் காரணமாக சமூகமும் நாடும் சீரழிந்து வருகின்றன. எனவே அவற்றைக் கண்டு பிடித்து அழிப்பது சிறந்த செயலாகும். எவ்வாறிருப்பினும் இவ்வாறு போதைப்பொருட்களை மீட்பதைப் போலவே 323 கொள்கலன்கள் சட்ட விரோதமாக விடுவிக்கப்பட்ட விதம் மற்றும் அதில் இருந்த பொருட்கள் எவை?, விடுவிக்க அனுமதி அளித்தவர்கள் யார்? போன்றவற்றையும் அரசாங்கம் கண்டறிந்து அது குறித்த தகவல்களை வெளியிட வேண்டும்.

இந்தக் கொள்கலன்களில் போதைப்பொருட்கள், ஹெரோயின், அங்கீகரிக்கப்படாத பொருட்கள், சட்டவிரோதப் பொருட்கள் இருந்தனவா? என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.(ம-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் பதவி உயர்வுக்கு பேரவை அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசியராகவும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆறு பேரைப் பேராசிரியர்களாகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று செப்ரெம்பர் 27 ஆம் திகதி சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி.திருக்குமரன், பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சத்திர சிகிச்சையியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி, சிரேஷ்ட விரிவுரையாளரும் சத்திர சிகிச்சை நிபுணருமான சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா, உடற்கூற்றியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி துரைரட்ணம் செந்தூரன், புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சமஸ்கிருதத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவநேசன் சபா ஆனந் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜி.திருக்குமரன் விவசாய உயிரியலில் சிரேஷ்ட பேராசிரியராகவும், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி சிறுநீரகவியலில் பேராசிரியராகவும் சத்திர சிகிச்சை நிபுணர் சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா சத்திரசிகிச்சையியலில் பேராசிரியராகவும் உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி துரைரட்ணம் செந்தூரன் உடற்கூற்றியலில் பேராசிரியராகவும் புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா புவியியலில் பேராசிரியராகவும் சமஸ்கிருதத்துறைத்தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாத சர்மா சமஸ்கிருதத்தில் பேராசிரியராகவும் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் உடற்கல்வியியலில்.பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ம-7)

# வரி செலுத்தாதோருக்கு காலக்கெடு விதிப்பு

(கொழும்பு)

2024/2025 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான இறுதி வருமான வரி செலுத்துவது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முக்கிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதன்படி, குறித்த வரி செலுத்துதல்களை நாளை மறுதினம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு அனைத்து வரி செலுத்துவோருக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த உத்தரவு தனி [illegible] கூட்டாண்மைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட பிற நிறுவனங்களுக்குப் பொருந்தும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வரி செலுத்துவோர், செலுத்த வேண்டிய வரித் தொகையை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது இணையவழி வரி செலுத்தும்வசதி மூலமும்செலுத்தலாம் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொடுப்பனவுக்கான இறுதித் திகதியான செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் தொகைகள், வங்கி வரைவோலை அல்லது கொடுப்பனவு உத்தரவு மூலம் தீர்க்கப்பட்டாலும் தாமதமான செலுத்துதல்களாகக் கருதப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரியைச் செலுத்தாமல் விடுதல் அல்லது தாமதமாகச் செலுத்துதல் ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் வட்டி மற்றும் தண்டப் பணம் ஆகியவை தள்ளுபடி செய்யப்படவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கொடிகாமத்தில் வாகன விபத்து

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் A9 வீதி உசன் சந்திப்பகுதியில் நேற்று இரவு 07.10. மணியளவில் வாகன விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இரண்டு உந்துருளிகள் ஒன்றோடு ஒன்று மோதுண்டத்தில் குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

இதில் உந்துருளிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அதில் பயணித்தவர்களும் காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு
2026

புலமைப்பரிசிற் பரீட்சை
எழுதிய மாணவர்களிற்கான
புதிய
தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
(5520)
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# மன்னார் மக்களின் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியும் பங்கேற்பு

(மன்னார்)

மன்னாரில் காற்றாலை மின் செயற்றிட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இணைந்துள்ளனர்.

மன்னாரில் காற்றாலை மின் செயற்றிட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்சியாகப் போராடி வருகின்ற நிலையில் மக்களின் விருப்பத்திற்கு மாறாக காற்றாலைகளைக் கொண்டு செல்வதற்கான முயற்சி நேற்றும் இடம்பெற்றுள்ளது.

இந் நிலையில் குறித்த காற்றாலை உதிரிப்பாகங்களை ஏற்றி வந்தவாகனங்களைப் போராடி அமைதியான முறையில் தடுக்க முயன்ற மக்கள் மீது பொலிஸார் கொடூரமான தாக்குதலை மேற்கொண்டதில் மூவர் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் காற்றாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடும் மக்களின் போராட்டகளத்தில் இணைந்துள்ளனர். (ம-7)

# நாட்டில் இன ஒற்றுமை சீர்குலையாதிருக்க நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியம்

## சட்டக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு இனக்குழுக்களிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கும் வெளிநாடுகளின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முக்கியமானது என இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபர் பிரசாந்த லால் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்ட செயற்படுத்தலில் அதன் செயற்றிறன் குறித்து, நடைபெற்ற குழு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

நாடு சரியான பாதையில் பயணிக்க நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தற்காலிகமாக இரத்துச் செய்யப்படக்கூடாது எனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகளின் வாக்குறுதியின்படி நன்மைகளை இரத்துச் செய்வதற்கான ஒரு சட்டத்தை இயற்றுவது போன்ற பகுதிகளில் நிர்வாகச் சீர்திருத்தங்களில் அரசாங்கத்தின் சாதனைகளையும் பாராட்டினார். (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 12 . 1938



மறைவு
24 . 09 . 2025

## திரு.வைரமுத்து சுப்பிரமணியம்
(Rest House Maniam)

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கல்வியங்காடு, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சுப்பிரமணியம்(Rest house maniam) அவர்கள் கடந்த 24.09.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் வைரமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் குமாரசாமி - இராஜலட்சுமி தம்பதி களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நவநீதம்மா அவர்களின் அன்புக் கணவரும் ரவிச்சந்திரன், மனோச்சந்திரன், சுரேஷ்சந்திரன் (சூட்டி), குணபாலச்சந்திரன் (சந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேவதி, ஷோபனா, அனுஷா, உஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான புவேனஸ்வரி, நாகேஸ்வரி, மஹேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, கதிரவேலு, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிரோசன், இளங்கோ, அபிராமி, ஆதவன், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 5.00 - பி.ப 9.00, நாளை 29.09.2025 திங்கட்கிழமை காலை 8.00 - காலை 9.30 மணிவரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada எனும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு காலை 9.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று காலை 11.00 மணியளவில் North Toronto crematorium 2 stalwart Industrial Dr, Gormley, ON LOH 1GO, Canada எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ரவி - மகன்(கனடா) : +16472960164
மனோ - மகன்(கனடா) :+16474037684
சூட்டி - மகன்(கனடா) : +14167250411
குணா(சந்தி) - மகன்(கனடா) : +14167970684

தகவல் :
குடும்பத்தினர்
(5536)

IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Special offer 50% Pratical on Computer
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970
(5158)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

Happy Supermarket - உரும்பிராய்

1Kg வெள்ளைச் சீனி - 200/= Max 3Kg
1Kg Prima கோதுமை மா - 160/= Max 3Kg
5Kg பிறிமா கோதுமை மா - 900/=
1Kg சிவப்பு பருப்பு - 225/= Max 1Kg
1Kg மஞ்சள் பருப்பு - 290/= Max 3Kg
1Kg ஈக்குத் தீட்டல் - 185/=
1Kg அவல் - 260/= Max 1Kg
1Kg கடலை - 350/= Max 1Kg
1Kg சர்க்கரை - 240/= Max 3Kg
1Kg கடலைப்பருப்பு - 310/=
100g கற்கண்டு - 35/=
100g கச்சான் முத்து - 110/=
1Kg உளுத்தம்பருப்பு - 1099/=
1Kg பயறு - 790/=
1Kg தீட்டல்ப்பச்சை - 229/=

MAX 03
1200
1135
400g Anchor



320
280
1Kg சன்லைட் பவுடர்



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
(1600)
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org